Regisered as a News Paper in Ceylon ★ ★ விலை: சதம் 15



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி

கேட்டு வாங்குங்கள்
சங்கு மார்க்
பித்தளைப் பிணைச்சல்கள்
இரண்டுபக்கமும் துறையப்பட்டது
மலிவான விலையில்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 13 பங்குனி 5 முஹறம் 21 (19—3—71) வெள்ளிக்கிழமை இதழ் 37

# இந்திரா மந்திரிசபையில் ஐந்து புதிய முகங்கள்

## ஏழுபழையமந்திரிகளுக்கு பதவி வழங்கப்படவில்லை

புதுடில்லி,மார்ச்.18

**திருமதி இந்திராகாந்தி தலைமையிலான புதிய மந்திரிசபை இன்று நண்பகல் பதவிப்பிரமாணம் செய்துகொண்டது.**

**ராஷ்டிரபதிபவனில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பிரதமமந்திரிகளுக்கும் அ ரதுமந்திரிசபைசகாக்களுக்கும் ஜனாதிபதி திரு வி, வி. கிரி பதவிப்பிரமாணமும் இரகசியக காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார்.**

திருமதி காந்தியின் புதிய மந்திரிசபையில் 'கபினட்' அந்தஸ்துள்ள மந்திரிகள் 13பேர் இருக்கின்றனர் புதிதாக 5 மந்திரிகளைப் பிரதமர் நியமித்திருக்கிறார். பழைய மந்திரிகளில் 7 பேருக்கு மீண்டும் பதவி வழங்கப்படவில்லை.

ஸ்டேட் மந்திரிகள் 15 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். கபினட் அந்தஸ்துள்ள மந்திரிகள், ஸ்டேட் மந்திரிகள் துணைமந்திரிகள் ஆகியவர்கள் உட்பட புதிய மந்திரிசபையில் 36 அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். தேர்தலுக்கு முன்பு பதவியிலிருந்த மந்திரிசபையில் 54 பேர் இருந்தனர்.

பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி உள்துறை திட்டமிடல், தகவல் ஒலிபரப்பு அணுசக்தி ஆகிய துறைகளுக்குப் பொறுப்பாய் இருப்பர்.

பழைய மந்திரிகள் திரு வை. பி. சவான் திரு ஜகஜீவன்ராம் திரு பக்ருதீன் அலிஅஹமத் சர்தார்சுவரண்சிங் ஆகியவர்களுக்கு அவர்கள் முன்பு வகித்த அதேபதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

திருவாளர்கள் தினேஷ்சிங் வி, கே, ஆர் வி. ராவ் ரகுராமையா சஞ்சீவையா திரிகுணசென் பி,ஆர். பகத் திருகுல்சாரிலால் நந்தா ஆகியவர்கள் புதிய மந்திரிசபையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

நேபாளத்தில் முன்பு தூதராகவிருந்த திரு ராஜ்பகதூர் ஆஸாமில் முன்பு அமைச்சராகவிருந்த திரு எம் எச் சவுத்திரி திரு சித்தார்த்த சங்கர்ராய் பம்பாய் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு கோகலே இந்திய விமானப் போக்குவரத்து அதிபராகவிருந்த திரு மோகன்குமாரமங்கலம் ஆகியவர்கள் புதிய அமைச்சர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு குமாரமங்கலத்துக்கு எஃகு சுரங்க அமைச்சு வழங்கப்பட்டிருக்கிறது.

### தனபாலா காலமானர்

கொழும்பு, வியாழன் 'சுயாதீன' பத்திரிகைகள் நிறுவனத்தின் பிரதம ஆசிரியர் திரு டி வி தனபாலா காலமானார் பல நூல்களை எழுதிய இவர் முற்போக்கு இயக்கங்களில் ஈடுபாடு கொண்டவர் இவருக்கு வயது 65 இவர் லங்காதீப முன்னாள் ஆசிரியராவார்

### ஜகஜீவன்ராம் ராஜினமா

புதுடில்லி, மார்ச் 18

இந்திரா சார்பு காங்கிரஸ் மகாசபையின் தலைவராக இருக்கும் திரு ஜகஜீவன்ராம் அப்பதவியை ராஜினமா செய்யவிருப்பதாகத் தெரிகின்றது

இப்பதவியை திரு. டி. சஞ்சீவையா ஏற்றுக் கொள்ளவிருப்பதாகவும் அறியப்படுகின்றது

## மைசூர் மாநில மந்திரிகள் ராஜினமா

பெங்களூர், மார்ச் 18

மைசூரில் திரு. நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ் கட்சி மந்திரிசபை ராஜினமாச் செய்தது. முதலமைச்சர் திரு வீரேந்திர பாட்டீல் தமது மந்திரிசபையின் ராஜினமாவை இன்று கவர்னரிடம் சமர்ப்பித்தார்.

நிஜலிங்கப்பா காங்கிரசிலிருந்து 20 சட்டசபை உறுப்பினர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துகொண்டதால் அங்கு நெருக்கடி ஏற்பட்டது எதிர்க்கட்சித் தலைவரை மந்திரிசபை அமைக்க முயற்சி எடுக்குமாறு கவர்னர் அழைத்திருக்கிறார். (முன்வந்த செய்தி 3-ம் பக்கம்)

### பார்வையாளர்

யாழ்ப்பாணம், வெள்ளி சங்கானையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இலங்கைப் புகையிரதப் பகுதி புகையிரத நிலைய அதிபரான திரு. ஏ கே அழகசுந்தரம் சங்கானை வைத்தியசாலையின் உத்தியோகப்பற்றற்ற பார்வையாளராக நியமிக்கப் பட்டுள்ளார்

## சுவரொட்டிகளுக்குத் தடை

கோட்டை, வியாழன்

தற்போது அமுலிலிருக்கும் அவசரகாலச்சட்டத்தின்கீழ் பொய்வதந்திகளைப் பரப்புதல், பொய் அறிக்கைகளை வெளியிடுதல் தண்டனைக்குரியகுற்றங்களாகும்.

பொலிசாரின் அனுமதி பெறாமல் எவ்வித சுவரொட்டிகளும் சுவர்களில் ஒட்டக்கூடாது அவ்விதம் செய்தால் இலங்கை பொதுசனப் பாதுகாப்புச்சட்டத்தின் 40ம் அதிகாரத்தின்கீழ் தண்டிக்கப்படுவார்கள்

பொதுசனப் போக்குவரத்துக்குரிய பாதைகளைச் சீர்கெடுத்தல், ரயில்பாதைகளில் நாசவேலைகள் செய்தல் போன்ற தேசவிரோத நாசவேலைகள் செய்வோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க பொலிசாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தச்சட்டத்தின் பிரகாரம் நாசவேலை, தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவர்கள் என்று சந்தேகப்படும் நபர்களை கைதுசெய்து காவலில் வைப்பதற்கும் இடம் கொடுக்கிறது.

மற்றும் 10,403 நைலெக்ஸ் சேலைகள்
மார்ச் 24ம் திகதி சீட்டிழுப்பில்
இறக்குமதி செய்யப்பெற்று உள்ளூரில் அச்சடித்துத் தயாரித்த 6 யார் 45"
நைலெக்ஸ் சேலைகள்
தலா ரூபா 49-50 சதத்தை விசேஷ விலையாகக்கொண்டது.
சிங்கள - தமிழ் புதுவருட விசேஷ பரிசுகளாக
தேசிய லொத்தர்சபை இவற்றை உங்களுக்கு வழங்குகிறது:
இன்றே ஒரு சுவீப் டிக்கட்டைப் பெற்று
நைலெக்ஸ் சேலை ஒன்றைப் பரிசாகப் பெறுங்கள்.
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

எதிர் வரும் சித்திரை க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்காகக் கடந்த கால பொருளியல் பரீட்சைகளின் (1) 90 வினாக்களும் அதற்கான 100 பக்கங்களைக் கொண்ட விடைகளும், (2) 91 பக்கங்களைக் கொண்ட பொருளியல் தொகுப்பும் அனுபவமுள்ள பட்டதாரிகளால தயாரிக்கப்பட்டன. சித்தி நிச்சயம். விலை முறையே ரூபா 10-00, 7-50. வர்த்தகக்கல்லூரி, வருத்தித்துறை 1924-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2899

## விற்பனைக்கு

கார்:
சொந்தப் பாவனையிலுள்ள E Y 9000 தொடர்பிலக்கமுள்ள ஒஸ்ரின் சோமசெற்கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். A இராஜசிங்கம், குக் அவனியு, வட்டுக்கோட்டை. 2888


நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 6-30, 9-30
சிவாஜி-சரோஜாதேவி
நடித்த
அஞ்சல்பெட்டி 520

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன்
ஜெயலலிதா
நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லெட்சுமி
முத்துராமன் - நிர்மலா
நடித்த
வீட்டுக்கு வீடு

இன்றுமட்டும்
வின்ஸர்
[யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
கலங்கரை விளக்கம்

From 20-3-71
WINDSOR - JAFFNA
Winner of 11 Academy awards including
" Best Picture "
From Metro - Goldwyn - Mayer
William Wyler's
Presentation of
BEN HUR
Time 10-00 A.M., 2-3,0 7-00 P. M.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
கல்கியில் 'சோ' எழுதிய 'யாரோ இவர் யாரோ'
தொடர்கதை முழுநீள ஹாஸ்ய படமாக...





ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
சோ - மனோரமா - வாசு
நடித்த
ஆயிரம் பொய்

கெப்பிட்டல் (கொழும்பு)
விஜயா (மட்டக்களப்பு)
சிவாஜி காஞ்சனா
நடித்த
சிவந்த மண்

வெகு விரைவில்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா
வெலிங்டன் (யாழ்நகர்)
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
நடித்த
மூன்றெழுத்து
(கலர்ப்படம்)


## அறிவித்தல்

E. பிரான்சிஸ் பெரேராவின் எலக்ரோபிளேட் தங்க நகைகளை மறுபடியும் வியாபாரத்திற்கு வாங்கியிருக்கிறேன் என்பதை நேயர்களுக்கு தயவுடன் அறிவிக்கிறேன். போலி நகைகளை வாங்கி ஏமாறுதிருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். காப்பு விலை 6/- மற்றவை நேரில். ப. த. நடராசா, 18/1, மணல்தறை லேன், சந்தர்மடம், யாழ்ப்பாணம். 3210

## பகிரங்க ஏலவிற்பனை

### பாவனைக்குதவாத குளிர் சாதனப் பெட்டிகள்

சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம்
யாழ்ப்பாணம்

எனது காரியாலயத்திலிருக்கும் பாவனைக்குதவாத மூன்று குளிர் சாதனப்பெட்டிகள் 1971-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 28-ந் திகதி காலை 10-30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஆகக்கூடிய விலையைக் கேட்பதன் மூலம் அவற்றை வாங்குவதற்குத் தகுதிபெறும் கேள்விதாரர் உடனடியாக முழுப்பணத்தையும் செலுத்தி அவற்றை இவ்வலுவலகத்திலிருந்து எடுத்துச்செல்லவேண்டும்.

குளிர் சாதனப் பெட்டிகளைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் காலை 9-30 மணி முதல் பிற்பகல் 4-30 மணிவரை பார்வையிடலாம். போயா தினத்திற்கு முதல்நாள் காலை 8-30 மணி முதல் பிற்பகல் 1-00 மணிவரை பார்வையிடலாம்.

(ஒப்பம்)
சின்னப்பு ராசரத்தினம்
யாழ்ப்பாணம்
சுகாதார சேவை
அத்தியட்சகர்

சுகாதார சேவை
அத்தியட்சகர் அலுவலகம்
யாழ்ப்பாணம், 10-3-71
3212

## இந்திராவின் பேச்சுக்கள்

புதுடில்லி, மார்ச். 18

திருமதி இந்திராகாந்தி 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 1969 ஆகஸ்ட்வரை செய்த உரைகள், பேட்டிகள் அடங்கிய நூலொன்று வெளியிடப்பட்டுள்ளது.


வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
ராமராவ் அஞ்சலிதேவி
நடித்த
பால நாகம்மா

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
நடித்த
அடிமைப்பெண்

REGAL - Jaffna
Daily 3 shows
Poya days 4 Shows
Peter Sellers
Claudine Longet
in
THE PARTY

MANOHARA
Jaffna
10-30, 4-45, 7 & 9-45 p.m.
Espionage
in
LISBON
AGENT-077


# யு. எஸ். யோசனை: மெயர் நிராகரிப்பு

ரெல் அவிவ், மார்ச் 18

மேற்காசிய அமைதிக்கு அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு றோஜர்ஸ் தெரிவித்த யோசனையை இஸ்ரேல் பிரதமமந்திரி திருமதி கோல்டாமெயர் நிராகரித்துவிட்டார்.

என்னதான் நல்லெண்ணத்துடன் இதை அவர் சொன்னாலும் எம்மால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் இல்லையென்று திருமதி. மெயர் கூறியிருக்கிறார். காஸாமலைப்பகுதி, ஜோர்டானுடனன எல்லைபோன்றவற்றை இஸ்ரேல் தனது பாதுகாப்பின் நிமித்தம் விட்டுக் கொடுக்கமுடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

1967-ம் ஆண்டு சண்டைக்கு முன்னிருந்த எல்லைகளுக்கே இஸ்ரேலியர் திரும்பவேண்டும் என்றும் வல்லரசுகள் அளிக்கும் உத்தரவாதம் பிடித்துக்கொண்டுள்ள இடங்களைவிட பாதுகாப்பானவிருக்கும் என்றும் திரு. றோஜர்ஸ் தெரிவித்திருந்தார்.

## இடமாற்றச்சபையில் கூ. மொ. வி. ஊழியர்

கோட்டை, வியா.

இடமாற்றச்சபையில் கூ. மொ. வி ஸ்தாபன ஊழியர் சபைப் பிரதிநிதிகளும் இடமாற்றச் சபையில் அங்கத்துவம் வகிக்க நியமிக்கப்பட்டுள்ளார்கள்

மேற்படி ஸ்தாபனத்தின் கிளையில் தொடர்ந்து நாலு வருடங்களுக்கு மேலாகச் சேவைசெய்தவர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். இதை மேற்கொள்ளவே இத்தாபன ஊழியருக்கும் இடமாற்றச்சபையில் இடமளிக்கப்பட்டுள்ளதாகத்தெரியவருகிறது. இவ்விடமாற்றத்தில் நியாயமும் நீதியும் கடைப்பிடிக்கப்படுமெனச் சபை எதிர்பார்க்கிறது

## பன்பாய் நிலையங்கள்

திருக்கோணமலை. வியா.

திருகோணமலை மாவட்டம், மிகுந்தபுரம் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு பன்பாய் நெசவு நிலையங்கள் பன் இல்லாத காரணத்தால் வேலைகள் தடையுண்டிருந்தன. சிரமமான முறையில் இதனை நிவர்த்தியாக்க திருமலைப் பிரிவுக் காரியாதிகாரி சாம்பசிவ ஐயர் மேற்கொண்டுள்ளார்.

## 150 ஏக்கரில் மிளகாய் சாகுபடி

திருக்கோணமலை, வியா.

திருக்கோண மாவட்டத்திலுள்ள 150 ஏக்கர் நிலத்தில் மிளகாய்ச்சாகுபடிசெய்வதற்கான திட்டத்தை திருமலைப் பிரிவுக் காரியாதிகாரி சாம்பசிவ ஐயர் மேற்கொண்டுள்ளார். இத்திட்ட விடயமனைத்தும் காணி விவசாய அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இச்செய்கை பெரும்பாலும் உப்புவெளி, சாம்பல்தீவு, கப்பற்துறை, ஆகிய பிரதேச சபைகளை உள்ளடக்கியனவாக இருக்கும்

## ஆசிரியர்களின் முன்மாதிரி

ஒட்டுசுட்டான், வியா

ஒட்டுசுட்டான் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவிருப்பதால் மாணவர் கல்வியில் பாதிப்பு ஏற்படாவண்ணம் கடமைபுரியும் ஆசிரியர்கள் இருவர் மாலை நேரங்களில் இரண்டு மணித்தியாலங்கள் பிள்ளைகளுக்கு கல்விபுகட்டி வருகின்றனர் ஐந்து ஆசிரியர்கள் கடமைபுரிந்த இடத்தில் இரண்டு ஆசிரியர்களே தற்சமயம் கடமைபுரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'அத்திவாரம் சரியாக அமைய வேண்டும்'

அரியாலை, வியாழன்

"இலக்கியகர்த்தாக்களும், இசைக்கலைஞர்களும், சிறந்த சிற்பிகளும், அறிஞர்களும் கூட வாழ்க்கையில் தோற்றுவிடுகின்றார்கள் காரணம் அவர்களது அத்திவாரம் சரியாக அமையாத காரணமே"

மேற்கண்டவாறு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் சிறப்புரையாற்றுகையில் திருமதி சத்தியதேவி துரைசிங்கம் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு க இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மேலும் அவர் பேசுகையில் வாழ்க்கையில் வெற்றிகாண வேண்டுமாயின் அத்திவாரம் சரியாக அமையவேண்டும். அத்திவாரம் வாழ்க்கையில் சரியாக அமையவேண்டுமாயின் திருக்குறள் கற்கவேண்டும் என்று கூறினார்.

ஆசிரியர் திரு செ சபாரத்தினம் உட்பட பலர் பேசினார்கள். சங்கீத பூஷணம் திரு ப முத்துக்குமாரசாமியின் திருக்குறள் இன்னிசையும் திருக்குறள் தொகுப்பு வெளியீட்டு விழாவும் நடைபெற்றது

## எண்ணைபவுசர் குடைசாய்ந்தது

ஒட்டுசுட்டான், வியா.

ஒட்டுசுட்டான் நீர்பாசன இலாகாவுக்கு டீசல் சுமந்து வந்த பெற்றோலியம் கூட்டுஸ்தாபன எண்ணை பவுசர் ஒன்று முத்தையன்கட்டுக்கு செல்லும் வழியில் உள்ள பாலத்தின்மீது ஏறுகையில் பாலம் உடைந்ததால் குடைசாய்ந்தது எண்ணையும் பவுசரும் பெருந்த சேததிற்குள்ளாகியதோடுசாரதியும். கிளினரும் மயிரிழையில் உயிர்தப்பினர். அண்மையில் இப்பாலம் நீர்ப்பாசன பகுதியினரால் திருத்தி அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## பெற்றோர் தினவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பெற்றோர் தினவிழாவும் கனிஷ்ட பாடசாலைப் பரிசளிப்பு விழாவும் நாளை மாலை 6-30 மணியளவில் நடைபெறவிருக்கிறது. வடமாநிலக் கல்வி அதிபதி திரு. டபிள்யூ டி. சி. மகாதந்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## திருவிழா

நாவலப்பிட்டி, வியாழன்

கொதமலை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த 12-ம் திகதி ஆரம்பமாகி 5 தினங்கள் உற்சவம் நடைபெற்று முடிவடைந்தது. வர்த்தகசிப்பந்திகளின் திருவிழாவான 3-ம் திருவிழாவன்று 'மலையகவில்லிசை மன்னன்' பெரி. சோமஸ்கந்தரின் வில்லுப்பாட்டு இடம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைசூர் 'சின்டிகேட்' ஆட்சிக்கு புதிய நெருக்கடி!

## 20 உறுப்பினர்கள் இந்திராகட்சிக்குமாறினர்

புதுடில்லி,மார்ச்.18

**மைசூர் மாநில அரசில் நெருக்கடி தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றது. நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 20 சட்டசபை உறுப்பினர்கள் இந்திராகாங்கிரஸ் கட்சியில் சேர்ந்து விட்டார்கள்.**

நிஜலிங்கப்பா தலைமையிலான காங்கிரஸ்கட்சி பதவியிலிருக்கும் இந்த மாநிலத்தில் அண்மையில் நடந்த லோக்சபா தேர்தலின்போது சகல தொகுதிகளிலும் இந்திராகாங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்றது.

திரு. நிஜலிங்கப்பாவின் சொந்த மாநிலம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

கட்சியிலிருந்து 20எம் எல் ஏக்கள் விலகிக்கொண்டதை அடுத்து முதலமைச்சர் வீரேந்திரபாட்டீல் அவசரமாக சட்டப்பேரவை ஆளும் கட்சிக் குழுவையழைத்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

அதே சமயம் திரு வீரேந்திரபாட்டீல் சட்டசபையின் நம்பிக்கையை இழந்து விட்டார் என்று எதிர்க்கட்சித் தலைவர் மைசூர்கவர்னரை சந்தித்து தெரிவித்திருக்கிறார். எப்படியும் அடுத்த வரவுசெலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்து தம் நிலையைத் தெளிவுபடுத்திக் கொள்ள முதலமைச்சர்திரு வீரேந்திரபாட்டீல் முடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது.

### ஒரிஸாவில் உட்கல்காங்கிரஸ் ஒத்துழைக்கும்

ஒரிஸா மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சியை நிறுவுமாஞல் அதற்கு ஒத்துழைப்பு அளிப்பதற்கு உட்கல்காங்கிரஸ் கட்சி விருப்பம் தெரிவித்திருக்கின்றது.

சோஷலிசத் திட்டங்களை இந்திராகாங்கிரஸ் அமுல் நடத்த முன்வருமானல் அது அமைக்கும் ஆட்சியில் பங்குகொள்ள உட்கல் காங்கிரஸ் கட்சியும் விரும்பும் எம்முடன் சேர்ந்து கொள்ள இந்திரா காங்கிரஸ் தயக்கம் காட்டும் பட்சத்தில் ஒத்த கருத்துள்ள ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து அரசு அமைப்பதற்கு நாம் முயற்சி கொள்வோம். என்று உட்கல்காங்கிரஸ்கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

### உ. பி. யிலும் நெருக்கடி

சம்யுக்த விதாயக் தளத்தின் தலைமையில் ஆட்சி நடைபெறும். உத்தர பிரதேசத்திலும் நெருக்கடி ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. பாரதீய கிராந்தி தளத்தின் காரியதரிசி திரு போரா ஜெகஜீவன்ராம் தலைமைக் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொண்டுவிட்டார். பதவியிலிருக்கும் சம்யுக்த விதாயக் தளத்தை மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்று அவர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

உத்தரபிரதேச முதலமைச்சர் திரு தி. என். சிங் இன்று ராஜிஞமா செய்வதென்றிருந்த தமதுமுடிவை பின்போட்டிருக்கிருர். மார்ச்மாதம் வரவுசெலவுத் திட்டத்தை சபையில்சமர்ப்பித்து நிலைமையை எதிர்நோக்குவதென்று அவர் முடிவு செய்திருக்கிருர்.

பீகாரிலும் நெருக்கடி தோன்றியிருக்கின்றது. அங்கு சம்யுக்த விதாயத் தளத்திலிருந்து சம்யுக்த சோஷலிசக் கட்சி விலகிக் கொள்ளும் என்றும் திரு ஜோர்ஜ் பெர்ணண்டஸ் கூறியிருக்கிருர்.

### பிரி. சோவியத் பிரதமர்கள் பாராட்டு

இந்தியாவில் மீண்டும் திருமதி இந்திராகாந்தி பெரும்பான்மை பலத்துடன் பதவிக்கு வந்திருப்பது குறித்து பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு ஹீத்தும்சோவியத் பிரதம மந்திரி திரு கொஸிஜினும் திருமதி காந்திக்குப் பாராட்டுக்கள் அனுப்பியிருக்கிருர்கள். இருநாடுகளுக்குமிடையிலான உறவுகள் தொடர்ந்து பலப்படும் என்று திரு கொஸிஜின் தம் பிக்கை தெரிவித்திருக்கிருர்.

பிரிட்டிஷ் பிரதமர்அனுப்பியுள்ள பாராட்டில் லண்டன் ஆக்ஸ்போட் பல்கலைக்கழகம் அளிக்கவிருக்கும் கௌரவ டாக்டர் பட்டத்தைப் பெற்றுக் கொள்ள வரும்போது பிரிட்டிஷ் அரசின் விருந்தினராய் தங்கியிருக்கும்படி திருமதி காந்தியைக் கேட்டிருக்கிருர்.

......

## புதியரக சோளம்

புதுடில்லி, மார்ச் 17

புரதசத்துநிறைந்த புதிய இன சோளம் ஒன்றை புதுடில்லி பாரதவிவசாயக்கழகம் கண்டுபிடித்துள்ளது.

இந்தச் சோளம் பற்றிய ஆராய்ச்சியின்போது எலிகளுக்கு சோளம் ஊட்டப்பட்டபோது பாலுக்கொப்பான புரதச்சத்தின் மூலம் எலிகளின் நிறை 3 லிருந்து 5 அரை வரை அதிகரித்துள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நன்றியுள்ள மனிதன்!

பாரிஸ், மார்ச் 18

மரணப் பிடியில் இருந்து தன்னைக் காப்பாற்றிய தனது நாய்க்குப் பெரும் ஆபத்து தோன்றுஏற்பட்டதைக் கேள்வியுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த எஜமானர் விரைந்து சென்று அந்த நாயை ஆபத்தினின்றும் மீட்டார்.

பிரான்ஸிலுள்ள பிறனீஸ் மலையில மேற்படி நாயின் சொந்தக்காரரான டானியல் குளோரியா என்பவர் பனிக் கட்டியால் பூரணமாக மூடப்பட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் பொழுது ரிநஸ் என்ற நாய் அவரை மீட்டது மீட்கப்பட்டதும் இவர் உடனே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார்.

தனக்கு உதவிசெய்த நாய் பனிக்கட்டியால் மூடப்பட்ட மலைத் தொடரில் அகப்பட்டு அவதிப்படுவதைக் கேட்ட டானியல் ஆஸ்பத்திரியிலிருந்து விரைந்துசென்று அதை மீட்டாராம்.

காங்கிரஸ் தலைவராக

## இந்திரா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்

புதுடில்லி மார்ச் 18

ஜகஜீவன்ராம் தலைமைக் காங்கிரசின் ஆட்சிமன்றக் குழுத் தலைவராகதிருமதி இந்திராகாந்தி ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை புதுடில்லியிலுள்ள கட்சிக் காரியாலயத்தில் ஜகஜீவன்ராம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இந்திராவைத் தலைவராக ஜகஜீவன்ராம் பிரேரிக்க, திரு. வை. பி. சவான் அனுவதித்தார். திருமதி இந்திரா காந்தியின் பெயரை ஜகஜீவன்ராம் பிரேரித்ததும் அங்கத்தவர்களின் ஆரவாரம் செய்துதங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

திருமதி இந்திரா, இந்திய மக்களின் நம்பிக்கையின் சின்னமாக விளங்குகின்ருர். நாட்டுமக்கள் அவரது கொள்கைக்கு ஆதரவளித்து தமது ஆதரவை சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக வலியுறுயுத்தினனர்என இந்திராவின் பெயரைப் பிரேரித்துப் பேசுகையில் ஜகஜீவன்ராம் தெரிவித்தார்.

திருமதி இந்திரா காந்தி பேசுகையில் மக்கள் தங்களது கட்டளைகளை எமக்கு மிகத் தெளிவாக அளித்து விட்டார்கள். எமது இலட்சியத்தை அடைவதற்கு ஒற்றுமையுடனும் உறுதியுடனும் பாடுபடுவோம் என்ருர்.

திருமதி இந்திரா காந்தி அலுவலகத்திற்குசிறிதுதாமதித்தே வந்தார். அவரை திரு. ரகுராமையாவும் மற்றவர்களும் வரவேற்றனர். அங்கு மக்கள் தங்கள் மகிழ்ச்சியை இந்திராவுக்குத் தெரிவித்தபோது கைகூப்பி அவற்றை ஏற்றுக் கொண்டார். அவர் தனதும் மந்திரிசபையினதும் ராஜிஞமாவைநேற்று ஜனதிபதியிடம் சமர்ப்பித்தார் அதனை ஏற்றுக்கொண்ட ஜனதிபதி புதியமந்திரிசபை அமைக்கப்படும் வரை அவர்களையே அப்பதவிகளை வகிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

......

## துருவவட்டத்திற்கு அருகில்முதலைகள்

மாஸ்கோ, மார்ச் 18


வடதுருவத்தில் கொடிய பனியும், பனிப்புயல்களும் உள்ளன. இந்த வட்டத்தில் வெதுவெதுப்பை விரும்பும் முதலைகளும் இருந்தன. காரணம் என்ன? பண்டைக் காலத்தில், இன்றைய வடதுருவப் பனிப்பிதேசத்தில், பசுமையான தாவரங்களும், மீன்களும். நீர்க்கோழிகளும் பூச்சிகளும் இருந்தன. காலப் போக்கில் படுவ நிலைமாறியது. யூரல் நதியிலிருந்து மண்ணையும் மணலையும்ஆறுகள் கொண்டுவந்தன. இதன் விளைவாக இங்குள்ள தண்ணீரின் ஆழம் குறைந்தது; சதுப்பு நிலம் அதிகமாகியது பின்னர் இங்குள்ள நிலங்கள் நிலக்கிரிப் படுக்கைகளாக மாறின. இந்த மாறுதல் நிகழும் போது. நீரிலிருந்து பழங்கால உயிர்ப் பிராணிகள் பூமியில் புதைந்து விட்டன. இவற்றுள் முதலைகளும் இருந்தன. இவை லட்சக்கணக்கான வருடங்களாகப் பூமியின் அடியில் புதைந்துள்ளன.

இந்த முதலைகளின் புதைகுழியை ஜி ஏ. திமித்திரியேவ் என்ற நில இயலாளர் இப்பொழுது கண்டுபிடித்துள்ளார். இது மாபெரும் தட்டு வடிவத்தில் உள்ளது. இதைச் சுற்றியுள்ள நிலக்கரி இப்பொழுது வெட்டி எடுக்கப்பட்டுள்ளது

......

## இடமாற்றம்

சங்கானை, வியாசேமமடு அ. த. க. பாடசாலை ஆசிரியர் திரு. க. ஆறுமுகம் வ ஓமந்தை மகாவித்தியாலயத்திற்கு மாற்றம் பெற்றுள்ளார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உண்மை உள்ளத்துடனும் பரிபூரண சுய நலத் தியாகத்துடனும் இதற்கு மேலாக தூய் மையுடனும் உழைப்பவர்கள் உலகத்தாரால் உளமாரப் போற்றப்படுவர். —விவேகானந்தர்

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம் 5ந் திகதி (19-3-71)


## இந்திரா மந்திரிசபை

தந்தையைவிட ஆற்றலும் துணிச்சலும் நிரம்பப் பெற்றவர் என்று தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து பலரும் திருமதி இந்திராவைப் பாராட்டினார் புதிய மந்திரி சபையை அமைத்துள்ள திருமதி இந்திராவைப் பார்த்து அமரகவி பாரதியார் கனவுகண்ட புதுமைப் பெண் இந்திராவே தான் என்று சொல்லக் கூடும், நாட்டின் வறுமையைப் போக்க புதியவழி காண்போம் என்று உறுதி கொண்ட இந்திரா புதிய வழி சமைக்கப் புறப்பட்டு விட்டார் என்றே சொல்ல வேண்டும்

நாடும் நாட்டு மக்களின் நல்வாழ்வுமே மூச்சாகக் கொண்டிருந்த பண்டித ஜவஹர்லால் நேருவுக்குச் சிலர் இடையூறாக இருந்தார்களென்பதை நன்கு உணர்ந்திருந்த திருமதி இந்திராகாந்தி அவர்கள் என்னதான் பெயரும் புகழும் கொண்டிருந்தபோதிலும் காலத்துக்கேற்ப புதிய மாற்றங்களுக்கு இடம் கொடுக்க மாட்டார்களென்பதை அறிந்து அவர்களை வெளியேற்றினார். அவர்கள் தமக்குப் பெரிய சவாலாக உருவெடுத்ததும் மக்களிடமே தீர்ப்புக்கோரினர். மக்களின் தீர்ப்பு இந்திராவுக்கே கிடைத்தது.

திருமதி இந்திரா நேற்று அமைத்த புதிய மந்திரி சபை மேலும் விஸ்தரிக்கப் படலாம் இப்போது அமைக்கப்பட்டுள்ள மந்திரிசபையில் பதின்மூன்று பேரே அங்கம் வகிக்கின்றனர். உதவி அமைச்சர்கள், ராஜ்ய அமைச்சர்கள் என மொத்தம் முப்பத்தி ஆறு பேர் இப்போது மந்திரிசபையில் அங்கம் வகிக்கின்றனர். பழைய மந்திரிசபையில் இவர்கள் அங்கம் வகித்தனர்.

முன்னைய மந்திரிசபையில் மந்திரிகளாக இருந்த திரு குல்சாரிலால் நந்தா உட்பட 7 பேர் புதியமந்திரி சபையில் இடம்பெறவில்லை. திரு மோகன் குமாரமங்கலம் உட்பட ஐந்துபேர் புதிதாக மந்திரிசபையில் அங்கம்பெற்றுள்ளனர். இம்முறை திருக்கணித் தொகுதியில் வெற்றியீட்டிய பழைய மந்திரி திரு. ஓ. வி. அளகேசனும் கூட புதிய மந்திரிசபையில் இடம் பெறவில்லை. சவான், ஜகஜீவன்ராம் சுவர்ண்சிங், பக்ருதீன் அலி அகமத் ஆகியவர்களே புதிய மந்திரிசபையில் இடம்பெற்றுள்ள முன்னைய மந்திரிகள்.

புதிய மந்திரிசபையில் ஆற்றலும் அனுபவமுமுள்ள முன்னைய மந்திரிகள் சிலரையும் முற்போக்கான புதிய சமுதாயத்தை அமைப்பதற்குப் புதிய இரத்தம் ஊட்டும் பொருட்டு புதியவர்கள் சிலரையும் திருமதி இந்திரா சேர்ந்துள்ளதன்மூலம் பழமையையும் புதுமையையும் இணைத்து, அனைத்து புதிய பாதையில் நிதானமாக நாட்டை வழிநடத்தத் திட்டமிட்டுள்ளாரென்பது தெளிவாகிறது.

பூரணவெற்றி கிடைத்து விட்டதென்பதற்காக நிலைமையை மறந்து முற்போக்கு எனக் கோஷித்துக்கொண்டு நிதானமில்லாமல் அவசரப் பட்டுத் தீவிரப்போக்கில் செல்லத் தொடங்கினால் அரசாங்கத்துக்கோ நாட்டுக்கோ நன்மை கிடைக்குமென எதிர்பார்க்கமுடியாது.

இதை உணர்ந்து திருமதி இந்திரா தமது புதிய மந்திரி சபையைச் சரியான முறையில் அமைத்திருப்பது அவரது அரசியல் ஞானத்துக்கு சிறந்தசான்று

## 'ஆசிரிய இடமாற்றசபை தொடர்ந்து இயங்கவேண்டும்'

### தமிழரசுக் கட்சியின் நோக்கம் இதுதான் என்கிறார் உடுவில் எம்.பி.

யாழ்ப்பாணம் வெள்ளி இப்போது இயங்கிவரும் ஆசிரியர் இடமாற்றச் சபையை நீக்கிவிடவேண்டுமென்று அரசாங்கக் கட்சி எம்.பிக்கள் பலர் தாம் தயாரித்திருக்கும் மகஜரில் கைவெழுத்திடுமாறு தமிழரசுக்கட்சி எம்.பிக்களைக் கேட்ட போது அவர்கள் மறுத்து விட்டனர்

இவ்வாறு உடுவில் எம்.பி திரு வி. தர்மலிங்கம் அகில இலங்கை சுவீகரிக்கப்பட்ட தமிழாசிரிய சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் பேசும்போது கூறினார். யாழ் மவாயா கபேமேல் மாடியில திரு எஸ் செல்லையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்திரு தர்மலிங்கம்மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஆசிரியர் இடமாற்றச் சபை தொடர்ந்து இயங்கி வரவேண்டுமென்பதேதமிழரசுக் கட்சியின் நோக்கமாகும்.

இன்றைய நிலையில் ஆசிரியர்கள் மொழிவழி தொழிற்சங்கங்களில் சேரவேண்டும் சிங்கள ஆசிரியர்களுடைய பிரச்னைகள் வேறு தமிழாசிரியர்களின் பிரச்னைகள் வேறு தென்னிலங்கையிலுள்ள பல தமிழ்ப்பாடசாலைகள் மூடப்படுவதற்குத் தமிழாசிரியர்களே காரணமாகும்"

வட்டுக்கோட்டை எம்.பி திரு ஆ. தியாகராசா பேசுகையில், ஆசிரியர்கள் தேசிய ரீதியில் தமது பிரச்னைகளை நோக்க வேண்டும் தமிழ் ஆசிரியர்களுக்கு மட்டும்தான் பிரச்னைகள் உண்டு என்பதில்லை, சிங்கள ஆசிரியர்களுக்கும் பல பிரச்னைகள் இருக்கின்றன இப்போது அமுலிலிருக்கும் ஆசிரிய இடமாற்ற விதிகளும் கையாளப்படும் முறைகளும் தவறானவை புதியதிட்டமொன்று அமுலுக்கு வரும்போது இப்பிரச்னைகள் கவனிக்கப்படவேண்டும்" என்றார்.

ஆசிரிய சங்க சம்மேளனத் தலைவர் திரு திருநாவுக்கரசு, எஸ் மாணிக்கவாசகர் ஆகியோரும் பேசினர்.

# மதங்களைப் பிணைத்து நிற்கும் பொற்கப்பி விரதம்

— குல. சபாநாதன் —

விரதம் அனுட்டிப்பது இக்காலத்தில் சுத்த பைத்தியக்காரத்தனம் எனச் சில இளைஞர்கள் கருதுகின்றார்கள். இதற்குக் காரணம் அவர்கள் ஆழ்ந்தகன்ற ஆராய்ச்சியறிவில்லாதவர்களாய்ச் செம்மறியாட்டுக் கூட்டம்போல ஒருவர் இடும் கோஷத்தை ஏனையோர் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதேயாகும். விரதம் அல்லது நோன்பு அனுட்டித்தல் பிற சமயத்தவரிடமும் காணப்படுகின்றது. விரதம் வேறுபட்டபலசமயங்களையும் இணைத்து நிற்கும் பொற்சங்கிலியாகும். இதனுற்றான் காப்பது விரதம் என்று ஔவைப் பாராட்டியாரும் எல்லா மக்களுக்கும் பொதுவான முறையிற் கூறினார், இலங்கையில் சர்வசமயஒற்றுமைக்காக அரசாங்கம் முயன்று வருவது பாராட்டத்தக்கது.

இனி விரதம் என்பதனை நோக்குவாம், அந்தக் கரணங்கள் பொறிவாயிலாற் புலன்களிற் செல்லாது தூய வாதற்பொருட்டு அனுட்டிக்கப்படுவதுவிரதம் திருக்குறளாசிரியர் இவ்விரதத்தை செவ்வனே தொகைவகைப்படுத்தி விரித்துக்கூறியிருத்தலின் அவர்தம் நூலினையே ஈண்டு நோக்குவாம். இவ்வாசிரியர் துறவறப் பகுதியில் விரததைத் தவமும் தவங்காத்தலும் என வகுத்து இவ்விரண்டிற்கும் காரணமாகிய அருளுடைமையினை முதற்கண் விளக்கினார், புலால் மறுத்தலும் தவமும் தவமெனவும்ஏனைய அதிகாரங்கள் தவங்காத்தலெனவும் கொள்க. அந்தக்கரணங்கள் புலன்களிற் செல்லாது நிற்றற்குதவி புரிவது புலான்மறுத்தல் முதலிய தவங்களாம். பசித்துன்பம் பொறுத்தற்பொருட்டுப் பட்டினி கிடத்தலும் தவத்தின்பாற்படும்.

"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர் சொல்லு
மின்னாச்சொல் நோற்பா
ரிற்பின்"

என இஃது எடுத்தோதப் பட்டுள்ளது. மாந்தருள் மாணிக்கமாக விளங்கிய காந்தியடிகள் உண்ணாமையைப் பன்முறை செய்து காட்டியதுமட்டுமன்றி அதன் இன்றியமையாமையினையும் நன்கு விளக்கியுள்ளார்கள். கிறிஸ்துநாதரும் உண்ணாமை விரதத்தை மேற்கொண்டொழுகிய பெரியவராவர். முகம்மது நபி (சல்) அவர்களும் உண்ணாமை விரதத்தை மேற்கொண்டொழுகிய தவஞானச் செல்வராவர்.

ஆகவே பிரதான மதங்கள் யாவற்றிலும் விரதம் அனுட்டித்தல் சிறப்பிடம் பெறுகின்றது. பல மதங்களையும் ஊடுருவிப் பிணைந்து நிற்கும் பொற்கம்பி விரதமாகும்.

நோன்புக்கும் பட்டினிக்கும், வேற்றுமையுண்டென்பதை "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்ற நூலில் விளக்கியுள்ளார் திரு' வி. க. அவர்கள். "நோன்புக்கும் பட்டினிக்கும் வேற்றுமையுண்டு நோன்பு உடலை வளர்க்கும்; பட்டினி உடலைத் தேய்க்கும். நோன்பு உடல் நலத்தக்கென அன்பால் காப்பது. பட்டினி வறுமையாலோ வேண்டுமென்றோ வேறு பல திக்காரணம்பற்றியோ உடல் வருந்தக் கொள்வது. உடலோம்பலுக்கு நோன்பு இன்றியமையாதது. நோன்பு வயிற்றிலுள்ள பழைய நஞ்சை எரித்து. அன்றுடம் உண்ணும் உணவு சீரணமாகத் துணை புரிவது ... ஈரலுக்கு ஊக்கமூட்டி, குருதி ஓட்டத்தைச் செம்மைப்படுத்துவது

காந்தியடிகளின் வார நோன்பு உடலோம்பலுக்கெனப் பொதுவாகக்கொள்ளப்பட்டது. வேறு சில போழ்து அவர் கொண்ட உண்ணா நோன்பு, மனிதர்பாலுள்ள விலங்கு நீர்மைகளைக் களையும் நோக்குடையது. காந்தியடிகளின் எளிய உணவும் நோன்பும் அவர் உடலைப் பொன்னெனப் பொலிவித்தன. அடிகள் உடலில் இளமை தவழ்ந்ததைக் காணலாம். விரதமானது தூல உடம்பினையும் அந்தக்கரணங்களையும் ஆன்மாவையும் செம்மைப்படுத்தும் சிறப்புவாய்ந்தது'

"மருந்தென வேண்டா
வாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்'

எனும் தமிழ்மறை உடம்பில வியாதி நீக்கம் ஏற்படுவதை விளக்குகின்றது 'ஒருவேளை யுண்போன் யோகி; இருவேளை யுண்போன் போகி' எனும் பழமொழியும் 'மீதூண் விரும்பேல்' எனும் ஆன்றோர் அமுத மொழியும் இதனை வலியுறுத்துதல் காண்க.

### பயன்கள்

உணவானது நமக்கு எப்போதும், எவ்வளவிலும் சக்தி என்ற மூட எண்ணமானது தைத்திரிய உபநிடதத்தில் கண்டிக்கப்படுகிறது 'உண்ணப்படுவதால் மாத்திரமல்ல, பிற்காலம் உள்ளேயிருந்து, நோயின் உருவாகி, உண்டவனை உண்ணுவதாலும், உணவானது உணவெனப்படும் என்று அது கூறுகிறது. சாந்தோக்கிய உபநிடதத்தில் உணவானது மனதின் தொழிலுக்குமட்டில் ஆதரவு. உயிருக்கு ஆதரவாயுள்ளது நீர்–ஜலம்–அப்பு என்றும் சொல்லியிருக்கின்றது. இது நான் மறைகளில் அரிதான கொள்கையுமல்ல நீரையேயுணவாகக் கொண்டு நோய்க் காலத்தைக் கழிக்கலாம் என்பது பொருள் 'குடிக்கப்பட்ட நீர் 3 கூறாகப் பிரிக்கப்படுகிறது; அதன் மிகப் பருமனான சத்து கழிவு நீராய் வெளிப்படுகிறது; நடுவான சத்து ரத்தத்தில் சேருகிறது நுட்பமான சத்து உயிராகிறது' என்பது சாந்தோக்கிய உபநிடத உபதேசம். 'உலகில் எல்லாப் பொருளும் இம்மூன்று விதமான சத்துக்களால் அமைந்தது'என்று உபவாஸதத்துவம் என்ற நூலிற் குறிப்பிட்டுள்ளார் ... கி. லக்ஷ்மணசர்மா கள்.

'உபவாசத்திற் ... பட்ட ஔடதம் ... ஆசையால் உபவா... பது மிகுந்த புண்... அளிப்பதாம். உபவா... தியில்லாதவனுக்குச் ... ளிக்கும்; புண்பட்ட... குப் புண் ஆற்றும், ... ளிக்கு ஔஷதம... கோபிஷ்டனது கோ... யகற்றும்; வறுமை... யால் அவதிப்படுபவ... செல்வங் கொடுக்கும் ... த்திலுள்ள அழுக்கு... குவதற்காகவும். இ... களின் விஷயப்ப... ஒரு வேளை புசிப்பவ... உபவாசமிருப்பதையு... தங்களாக மனிதர் ... கின்றனர்' என்று ஒரு... சிரியர் எழுதியுள்ளா...

'உண்ணாவிரதம் உட...
பிணிபோ...
திண்கருத்து மீயும்தி...'

என்பது அறநூல்... நம்முடைய உடம்பி... நோய் நீக்கத்துக்கு ... மையாதது என்பது ... வரை கூறியவற்று... நன்கு புலப்படும். இய... சிகிச்சை ஆதரவாள... வாசத்துக்கே மு... கொடுக்கின்றனர்.

[இக்கட்டுரை ... சபாநாதன் எழு... ராத்திரிச் சிறப்பு ... நூலில் இருந்து எடுக்... டது. இந்நூலி... ரூபா 3/-]

# சிவாகமஞானபானு சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள்

— புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை —

சிவாகமஞான பானு எனப்போற்றப்பெற்றுவந்த பெரியார் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் சைவ உலகுக்கு கலங்கரை விளக்கம் போன்று விளங்கியவர். வேதம், சிவாகமம், சித்தாந்த சாத்திரம் பன்னிரு திருமுறைகள், புராண இதிகாசங்கள் இவைகள் எல்லாவற்றையும் பருகி விளங்கிய ஞானமுகில் அவர் 'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக' என்னும் வள்ளுவர் வாக்குக்கு இலக்கியமாயமைந்த வாழ்க்கையமைந்தவர்'

சிவாசாரியராய் இருந்து ஆலய விஷயங்களில் கர்ஷணாதிப்பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உத்ஸவாந்தம், உத்சவாதிப்பிராயச்சித்தாந்தம் வேண்டியனவெல்லாம் நெறிவே டிருந்து செய்துவந்தவர் செய்பவர்களுக்கு வழிகாட்டி உதவியும் செய்தவர்.

சமய உண்மைகள் பலவற்றையும் சைவமக்கள் அறியவேண்டும் என்னும் பராபகார சிந்தையுடன் குருக்கள் அநேக நூல்கள் எழுதி அச்சுவாகனமேற்றி வெளியிட்டவர். யாராயினும் சைவசமய சாத்திர முறைக்கு விரோதமாக எழுதினால் அல்லது பிரசாரம் செய்தால் தக்கபிரமாணங் காட்டி அவர்கள் தாம் செய்தது தவறு என்று உணரும்படி அவ்வப்போது பல பிரசுரங்கள் வெளியிட்டவர். ஆலய விஷயங்களில் சமய சாத்திர வகைகளில் சந்தேகங்களிருந்து வந்துகேட்டால் ஆதாரங்காட்டி அவர்கள் மகிழும்படி சந்தேகநிவிர்த்தி செய்துவிடுவார். இந்திய விலிருந்தும் சிவாசாரியர்கள் ... சந்தேகமானவைகளை ... எழுதிக்கேட்டுத் தெளிந்துள்ளனர்.



இங்ஙனம் தினக்கென வாழாப்பிறர்க்குரியாளராய் ஒழுக்கம் ஆசாரம் சிவ பூஜை இவைகளில் சிறிதும் தவறாதாராய். கல்வியால் அறிவும், அறிவால் ஒழுக்கமும், ஒழுக்கத்தால் அன்பும் அன்பால் சிவபரம் பொருளின் திருவருளும் பெற்றுச் சிவஞானச் செல்வராக அசைவிலாமனத்திட்பத்துடன் வாழ்ந்துவந்த இப் பெரியாருடன் பழகின நாள் முதல் நாளுக்குநாள் அவர்கள் பால் அன்புவளர்ந்து வருவதை பழகியவர்கள் அறிவர். இத்தகைய பெரியாரின் உடற்பிரிவு கேட்டது முதல் உள்ளத்தில் ஏதோ ஒரு அமைதியின்மை என்னை வாட்டியது. வினைப்போகமே ஒருதேகங்கண்டாய் வினைதானொழிந்தால் தினைப்போதளவு நில்லாதுகண்டாய் என அனுபூதிமான்கள் சொல்லி வைத்ததை நினைந்து நாமெல்லாம் ஆறுதல் அடைவோம்.

கடந்த 10ம் திகதி சிவபதமடைந்த அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களின் அசாக்கிரிகை ... கள் இன்று நடைபெறு...

வதைபொட்டி இக்க... இடம் பெற்றுள்ளது.

நாளை லட்சார்ச்சனை பூர்த்தி விழா

## தாவடி முனியப்ப... ஆலயம்

உழவுத்தொழிலின் ... மையுணர்த்தும் வ... அமைந்திருக்கு ந... வயல் புலத்தின் வா... காங்கேசன்துறை ... அழகுபடுத்தி தாவடி... மத்திற்குச் சிறப்பை... டுக்கின்றது முனியப்ப... யம்.

அகன்று சடைத்து ... பெரு விருட்சமாக... யளித்த அரசமரத்தி... கோவில் கொண்ட ... யப்பரை பண்டுதொ... வழிபாடு செய்து வ... கடந்த 4 ஆண்டு... முன்னர் பெய்த ... மழையால் அவ் அர... வேரோடு சாய்ந்தது... னர் அடியார்கள் வ... செய்துய்யும் வகையி... பான ஆலயம் ஒன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கிற்கும்

...குறிப்பிட்டுள்ளார் டாக்டர் ...கி. லக்ஷ்மணசர்மா அவர்கள்.

'உபவாசத்திற்கு மேற்பட்ட ஒளடதம் இல்லை ...ஆகையால் உபவாசமிருப்பது மிகுந்த புண்ணியம் அளிப்பதாகும். உபவாசம் சக்தியில்லாதவனுக்குச் சக்தியளிக்கும்; புண்பட்டவனுக்குப் புண் ஆற்றும், நோயாளிக்கு ஒளஷதமாகும். கோபிஷ்டனது கோபத்தை யகற்றும்; வறுமைப் பிணியால் அவதிப்படுபவனுக்குச் செல்வங் கொடுக்கும்; தேகத்திலுள்ள அழுக்குகளை நீக்குவதற்காகவும். இந்திரியங்களின் விஷயப் பற்று நீங்க ஒரு வேளை புசிப்பதையும் உபவாசமிருப்பதையும் விரதங்களாக மனிதர் கொள்கின்றனர்' என்று ஒரு நூலாசிரியர் எழுதியுள்ளார்.

"உண்ணாவிரதம் உடலின் பிணிபோக்கிப் ...திண்கடுத்து மீயுந்திறம்"

...என்பது அறநூல். விரதம் நம்முடைய உடம்பிலுள்ள நோய் நீக்கத்துக்கு இன்றியமையாதது என்பது இதுவரை கூறியவற்றால் நன்கு புலப்படும். இயற்கைச் சிகிச்சை ஆதரவாளர் உபவாசத்துக்கே முதன்மை கொடுக்கின்றனர்.

[இக்கட்டுரை ...கி. குல. ...சபா...ன் எழு...ப சிவ ...ராத்திரிச் சிறப்பு என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது. இந்நூலின் விலை ரூபா 3/-]

## ...னு ...குருக்கள்



...வதையொட்டி இக்கட்டுரை இடம் பெற்றுள்ளது.

...நாளை லட்சார்ச்சனை பூர்த்தி விழா

## தாவடி முனியப்பர் ஆலயம்

...உழவுத் தொழிலின் மேன்மையுணர்த்தும் வகையில் அமைந்திருக்கு நந்தாவில் ...யல் புலத்தின் வாயிலிலே ...காங்கேசன்துறை வீதியை அழகுபடுத்தி தாவடிக்கிராமத்திற்குச் சிறப்பைக் கொடுக்கின்றது முனியப்பர் ஆலயம்.

...ஆகன்று சடைத்து ஓங்கிப் ...பெரு விருட்சமாகக் காட்சியளித்த அரசமரத்தின் கீழே ...காவில் கொண்ட முனியப்பரை பண்டுதொட்டு வழிபாடு செய்து வந்தனர். ...டந்த 4 ஆண்டுகளுக்கு ...முன்னர் பெய்த அடும் ...மழையால் அவ் அரசமரம் ...வேரோடு சாய்ந்தது. பின் ...னர் அடியார்கள் வழிபாடு ...செய்துய்யும் வகையில் சிறப்பான ஆலயம் ஒன்றை உருவாக்கி அதில் முனியப்ப சுவாமியைப் பிரதிஷ்டை செய்துள்ளார்கள்.

இவ்வாலயத்தில் தொடர்ந்து 28 நாட்களாக தினமும் மாலையில் அபிஷேக ஆராதனைகளுடன் இலட்சார்ச்சனை மிகவும் விமரிசையாக நடைபெற்று வருகிறது.

இம்மாதம் 20-ம் திகதி சனிக்கிழமை சங்காபிஷேக விழாவுடன் இலட்சார்ச்சனை பூர்த்தியாகிறது.

எஸ். ஆர். திருஞானசம்பந்தன்.

## "மகத்தான பணி"

யாழ்ப்பாணம், வெள்ளி

"மக்கள் செய்யும் சேவைகளில் ஆசிரியப்பணி மகத்துவமானது மட்டுமன்றி மகிழ்ச்சிகரமானதும் கூட வருங்கால அறிஞர் சமுதாயத்தினை உருவாக்கும் சிற்பிகளே ஆசிரியர்கள் ஆசிரியர்களுக்கு கிடைக்கக்கூடிய சுதந்திரம் மகிழ்ச்சி புகழ் சமூகத்தில் வேறு எவருக்கும் எளிதில் கிடைத்து விடாது இத்தகையபுனிதமும் பொறுப்பும் வாய்ந்த ஆசிரியப் பணியினைமேற்கொண்டிருப்போர் கடமையுணர்வோடும் ஆர்வத்தோடும் கடமையாற்றினுல் தான் மாணவருலகம் பயன் பெறும்"

யாழ்: ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரியில் கடந்த மூன்றரை ஆண்டுகளாகச் சரித்திர-குடியியல் ஆசிரியராகக் கடமையாற்ற பட்டதாரிப் பயிற்சித்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறச் சென்றுள்ள திரு. க மாசிலாமணி மேற்படி கல்லூரி ஆசிரியர்களும்-மாணவர்களும் சேர்ந்து தமக்களித்த பிரிவுபசாரத்திற்கு நன்றிதெரிவித்துப்பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

கல்வி நிலையத்தின் முகாமையாளர் திருஇவி கார்த்திகேசு ஆசிரியர் பண்டிதர் இராசையா, செல்வன் பாலசுப்பிரமணியம். செல்வி கமலாவதி ஆகியோர் ஆசிரியரின் சேவைகளை எடுத்துக் கூறிப் பாராட்டுரை வழங்கினர், தேனீர் விருந்தளிக்கப்பட்டதுடன் இன்னிசை நிகழ்ச்சிகளுமிடம்பெற்றன

## பொதுச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று மாலை யாழ், நகரசபை மண்டபத்தில் 'சமஷ்டி அமைப்பு தமிழருக்கு உகந்ததா' என்னும் பொருள் பற்றி வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு ஆ தியாகராஜா பொதுச் சொற்பொழிவொன்றை நிகழ்த்தவுள்ளார்.

## வழிபட்டனர்

அளவெட்டி, வியா.

அளவெட்டி தெற்கு முத்துமாரியம்மன் ஆலயத்தில் 15-ந் திகதி திங்கட்கிழமை குளிர்த்திவிழாவும் விசேட அபிடேக ஆராதனைகளும் நடைபெற்றன அன்றையதினம் சகலரும் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டனர்.

## தங்கத்தின் மீது தரக்கட்டுப்பாடு

கோட்டை, வியா

தங்கத்தின்மீது தரக்கட்டுப்பாடு விதிக்க அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது இலங்கையில் இப்பொழுது கிடைக்கும்தங்கத்தின் தரம் 22 காரட்டுக்கு குறைவாகவே இருப்பதாக புகார் கள்கிளம்பியிருப்பதே இதற்குக் காரணம்

தமிழ்நாட்டில் அமுலில் இருக்கும் முறையையே இங்கும் தங்கத்தின்மீது விதிக்கப்பட விருப்பதாகத் தெரிகிறது

# தம்பரின் நினைவு

### கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா

*யாழ்ப்பாணத்துக் கல்விமான்களில் ஒருவரும் சிறந்த ஆலோசகரும் நல்லாசிரியருமான திரு. தம்பர் அவர்கள் இவ்வுலகைநீத்து நேற்று 31-வது தினம். அன்னாரை அவரதுமாணவர்ஒருவர் இங்கு நினைவு கூருகிறார்.*

கிட்டத்தட்ட இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் நான் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் விஞ்ஞானக் கல்விபெறச் சேர்ந்தபோது திரு. தம்பர் அவர்கள் சர்வகலாசாலை புகுமுக வகுப்பிற்குப் பிரதம ஆசிரியராக இருந்து பௌதிகம் கற்பித்தார். எனக்கு அப்போது பௌதிகம் புதிது எனினும் திரு தம்பரின் திறமையான கல்வி முறையால் பௌதிக கோட்பாடுகளும் விதிகளும் மட்டுமல்ல, அவைகளின் செயல்முறைப் பிரயோகங்களும் பரிசோதனைகளுங்கூட என் மனதில் இலகுவாகப்புகுந்து நிலைநிற்க வழிசெய்யப்பட்டது ஒரேஒருபாடப்புத்தகத்தையே ஆங்கிலத்தில் படித்து ஆங்கிலேய ஆசிரியரால் அதில் எழுதப்பட்ட எண்ணங்களைத் தமிழில் கிரகிப்பதே பகீரதப் பிரயத்தினமாகவிருந்த அந்த நாளில் திரு. தம்பர் அவர்கள் ஐந்தாறு புத்தகங்களை ஒரே நேரத்தில் திறந்து வைத்து ஒவ்வொன்றிலுமுள்ள விசேடஅம்சங்களை எடுத்து அமைத்து தொடர்ச்சியாக ஒரேபாணியில் முன்பின் பிணக்குகள் இல்லாமல் குறிப்புகளை மாணவர்கள் எழுதக்கூடியமுறையில் வாசகமாகச் சொல்லுவார்.

அவருடைய திறமையினால் இலங்கை முழுவதிலுமிருந்து 22 மாணவர்களே பொறியியல் கற்கச் சர்வகலாசாலைக்கு எடுபட்ட பொழுது நானும் திரு. தம்பரின் இன்னொரு மாணவரும் யாழ். மத்திய கல்லூரியிலிருந்து இரட்டையராகத் தெரிவுசெய்யப்படுவது சாத்தியமாயிற்று. பௌதிகப் பாடத்திற்கு இடையிடையே புதினப்பத்திரிகை படிக்கப்போவது அவர் வழக்கம். ஆனால் பதினறு பக்கமுள்ள பத்திரிகையிலுள்ள சகல புதினங்களையும் கிரகித்து மனதில் பதிய வைத்து ஒரு பந்தி தவறாமல் படிப்பதற்கு அவருக்குப் பத்துநிமிடம்போதுமானது. அப்படியாகக் கிரகித்த பொது அறிவைப் பயன்படுத்தித்தான் அரசியலிலும் கல்விமுறைகளிலும் சங்கச் சச்சரவுகளிலும் கல்லூரி நிர்வாகத்திலும் அவர் எல்லோருக்கும் விசேட ஆலோசனைகள் வழங்கினார்.

வாழ்க்கையிலே ஓரளவு முன்னேறிவந்துள்ள பழைய மாணவனுகிய என்னை 1969-ல் யாழ். மத்திய கல்லூரியினர் பிள்ளைகளின் பரிசளிப்பு விழாவிற்குப் பிரதம விருந்தினராக அழைத்திருந்தபொழுது திரு. தம்பர் அவர்கள் மேடையில் இளைப்பாறிய தலைமையாசிரியராக எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தார். அந்த ஆண்டிற்குரிய தலைமை ஆசிரியரின் அச்சிட்ட அறிக்கையை திரு இ. சபாலிங்கம் வாசித்த அரை மணித்தியாலயத்திற்குள் திரு தம்பர் என்னைக் கேள்விகள் பலகேட்டு குசலம் விசாரித்து முடித்துவிட்டு காலஞ்சென்ற ஒரு தலைமையாசிரியராகிய திரு. நைல்ஸ் ஐப் பற்றியும் நவீன ஓவியத்தைப் பற்றியும் இரு வியாக்கியானங்களை எளிதே முடித்துத்தன்பரந்த அறிவையும், பழைய மாணவர்கள், ஆசிரியர்களில் தனக்குள்ள பற்றையும் செயல் முறையில் காட்டினர்

திரு தம்பரைப் பற்றிப் பல பெரியார்கள் பேசி, எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துக்காட்டியிருப்பதெல்லாம் எத்துணை உண்மை என்பதை நான் ஆமோதித்து என் நினைவிலிருந்த சில விஷயங்களை மேலே குறிப்பிட்டிருப்பதில் பெருமையடைகிறேன்.

திரு. தம்பரின் நினைவை நிலையுறுத்த அவரின் கலாசாலையாகிய யாழ். மத்திய கல்லூரி ஒரு விஷயத்தை உடனேசெய்யமுடியும். அங்குள்ள மாணவர் இல்லங்களிலொன்றைத் திரு. தம்பரின் பெயரால் அழைப்பதே அதுவாகும். திரு. தம்பர் ஆசிரியராக இருந்த பொழுது 'புல்லே' இல்லத்தைச் சேர்ந்தவர் என்பது எனது நினைவு. திரு. 'புல்லே'வை இன்றுள்ள மாணவருக்கோ ஆசிரியருக்கோ தெரியாது. அந்த இல்லத்தைத் தம்பர் இல்லம் என்று மாற்றியமைத்தால் அந்த இல்லத்தைச் சேர்ந்த ஆசிரியமாணவருக்கு அதன் பெயர் ஒரு திடமான கருத்தையும் கற்பனையையும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும் என்று எண்ணுகிறேன்.

அத்துடன் அவரின் வாழ்க்கையை நன்கு அறிந்த அன்... ...தம்பரின் ஜீவியசரித்திரத்தை எழுதி நூலாக வெளியிட்டால் அது

## நெஞ்சத்திலிருந்து நீங்காதவர்!

சிலர் எம்மைவிட்டுப் பிரிந்து போனாலும் அவர்களை நெஞ்சத்திலிருந்து பிரிந்து விடமுடியாது அந்த வரிசையைச் சேர்ந்தவர் தான் இலங்கை போக்குவரத்துச்சபையின் யாழ்ப்பாணப்பிரிவுக் கணக்காளரான திரு ஆர் தில்லைநாதன்

வழக்கம்போல் இ.போ.ச பஸ்மூலம் பிரயாணம் செய்யும்போது நோய்வாய்ப்பட்டு யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் இரண்டு நாட்களுள் அவரது நிலைமை மோசமடைந்தது பத்தாம் திகதி காலை 11-30மணி அளவில் உயிர் நீத்தார்

இவர் முதல்முதலாகதிருக்கோணமலையிலுள்ள கடற்படைக்களத்தில் 1943-ம் ஆண்டுதொடக்கம் 1958-ம் ஆண்டு வரைகடமையாற்றினர் கடற்படைத்தளத்திற்கு பொறுப்பாக இருந்த ஓய்வு பெற்ற பொலிஸ் சுப்பிறிண்டன் திரு டிக்மன் இவரது ஆற்றலையும்நேர்மையையும் பெருந்தன்மையையும் பெரிதும் புகழ்ந்துள்ளார்

இதன் பின்னர் இவர் 1958-ம் ஆண்டில் இருந்து இ-போ-ச வில் பிரதம லிகிதராக கடமையாற்றிவந்தார் இ-போ-ச விலும் திறமையாகக் கடமையாற்றி யாவரதும் பாராட்டைப் பெற்றார்.

இவர் தனது சொந்த ஊரான காரைதீவிலுள்ள சிவசுப்பிரமணியசுவாமி கோவிலுக்குச் செய்த அரும்பணி எவராலும் மறக்கமுடியாத தொன்றாகும் கடமையைச் செவ்வனே செய்யும் திறமையும் கொண்டு மனப்பான்மையும்யாவராலும் பாராட்டபெற்றவையாகும் இவரது திடீர் மறைவு இ-போ-சவுக்கும் அவரது ... பேரிழப்பாகும்.

'ஓர் அன்பர்'

# 2 ஆயிரம் தொன் மா!

## மேற்கு ஜெர்மன் அனுப்பும்

கோட்டை, வியா.

அடுத்த வாரத்தில் மேற்கு ஜெர்மனியிலிருந்து 2000 தொன் மாவு வந்துசேரவுள்ளது மேற்கு ஜெர்மனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி 14 ஆயிரம் தொன் மாவு மேலும் கிடைக்குமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது

300 தொன் உருளைக்கிழங்கையும் மேற்கு ஜெர்மனி இலங்கைக்கு அனுப்பிவைக்குமென்று அறிக்கையொன்று கூறுகிறது

# 'சமயத்தை நிந்தனை செய்யக் கூடாது'

கிரிதாரி பிரசாத்

மாவிட்டபுரம், வியாழன்

"துன்பப்படுபவர்களின் துன்பங்களை நீக்கி நல்ல இன்பம் உள்ளவர்களாக மாற்ற உதவும் சமயத்தை நிந்தனை செய்யக் கூடாது. நாம் சமயத்தை நிந்தனை செய்தால் பெருந்தீங்கு செய்தவர்களாகிவிடுவோம்"

இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளபக்திரதினம். கோயம்புத்தூர் முன்னாள் நீதிபதி திரு நா. கிரிதாரிபிரசாத் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் விசேட விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

ரசிகமணி கனக செந்திநாதன் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இன்று உலகம் மாறிவிட்டது. பழமையை மறந்து புதுமையில் இன்றைய உலகம் சென்று கொண்டிருக்கிறது கார்ல்மார்க்ஸ்காட்டிய பாதையில்ஒருசாரரும்நவீன முறையில் இளைஞர்களும் செல்லும்இன்றைய நிலையை நாம் பொருட்படுத்தக் கூடாது அவர்கள்எப்படியும் போகட்டும் நாம்பழமையை விடாது வாழவேண்டும் அப்போதுதான் நாம் நல்ல சூழ்நிலையை உருவாக்கமுடியும்

நாம் எந்த சமயத்தை கடைப்பிடித்தாலும்சரிநாம் அனுஷ்டிக்கும் சமயக்கடவுளை அன்புடன் தொழ வேண்டும் பக்தியுடன்மனம் நெகிழ வேண்டும் அப்போது தான் கடவுள் நமக்கு உதவுவதுடன் நாம் நல்ல சுபீட்சமான வாழ்க்கையையும் அமைக்க முடியும்.

நமதுதந்தையோ, தாயோ இறந்துவிட்டால் அழுகின்றோம் அவர்கள் திரும்பி வருகிறார்களா? ஆனால்ஞானசம்பந்தர் சிறியபிள்ளை அவர் அழுதவுடன் கடவுள் வந்து பாலகொடுத்தார் அல்லவா? நாம் அழுதால் வரமாட்டாத கடவுள் சிறியபிள்ளையான சம்பந்தர் அழுதவுடன் காட்சி கொடுத்தாரே? காரணம் என்ன? கடவுளை மன அன்புடன் வணங்கினுல் தான் நாம் நினைத்த காரியம் நிறைவேறும்" என்றார்

## ஊர்வலமும் கூட்டமும்

யாழ்ப்பாணம், வெள்ளி

லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நாளை மாலை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறதுபொதுக் கூட்டம்யாழ். கொட்டடியிலுள்ள மேற்படி காரியாலயத்தில் திரு அ வைத்திலிங்கம் தலைமையில் நடக்கவுள்ளது மாலை 5 மணிக்கு ஊர்வலம் ஆரம்பமாகும் மாலை 7 மணிக்கு கூட்டம் நடைபெறும்.

நாளைய இளைஞர்களுக்கும் மாணவருக்கும், உயர்ந்த உழைப்புக்கும் இலட்சியங்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம்.

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் கிளிநொச்சி

### தேவை

பின்வரும் வேலைகளுக்கான விண்ணப்பங்கள் இலங்கையரிடமிருந்து கோரப்படுகின்றன. முடிவு தேதி 26-3-71 விண்ணப்பங்கள் பதிவுத்தபால்மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

1. கிளை முகாமையாளர்:
தகைமைகள் ஜி. சி. ஈ. 6 பாடங்கள், வயது 25 35, கூட்டுறவுப் பயிற்சி-சாதாரணம், பிணை ரொக்கம் ரூபா 2000/- விமா ரூபா 5000/-

2. டிப்போ முகாமையாளர்:
தகைமைகள் ஜி சி ஈ. 6 பாடங்கள். வயது 25-35, கூட்டுறவுப் பயிற்சி- சாதாரணம். பிணை ரொக்கம் ரூபா 1000/- விமா ரூபா 5000/-, வியாபார அனுபவம் விரும்பத்தக்கது.

3 லிகிதர்:
தகைமைகள் ஜி. சி. ஈ. 6 பாடங்கள் கணக்கில் விசேட சித்தி. வயது 21-35 பிணை ரொக்கம் ரூபா 250/- கூட்டுறவுப் பயிற்சியும்-ஆங்கிலம், தமிழ் தட்டெழுத்து அனுபவமும் விசேட சலுகை பெறும்.

4. விற்பனையாளர்:
தகைமைகள் ஜே. எஸ். சி., வயது 21-35, பிணை ரொக்கம் ரூபா 500/- விமா ரூபா 2000/- கூட்டுறவுப் பயிற்சியும் (ஜனிஷ்டா) வியாபார அனுபவமும் விரும்பத் தக்கது.

5. பியூன்:
தகைமைகள் ஜே. எஸ். சி., வயது 21-30. பிணை ரொக்கம் ரூபா 250/-

6 தூதுவர்
தகைமைகள் ஜே எஸ். சி., வயது 21-30, பிணைரொக்கம் ரூபா 250/-

7. காவல்காரன்:
தகைமைகள் 7 ம் வகுப்பு, வயது 30 க்கு மேல். இளைப்பாறிய வலுவான படை உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. பிணை ரொக்கம் ரூபா 250/-

பரந்தன் தொழில் கந்தோரில் பதிவு பெற்றவர்க்கும் கரைச்சி வாசிகட்கும்விசேட சலுகையுண்டு,

பிறப்பத்தாட்சிப் பத்திரத்தினதும் அண்மையில் பெற்ற நற்சான்றிதழ் இரண்டின் பிரதிகளும் கல்வித் தராதர விபரங்களும் விண்ணப்பத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

ஒப்பம் பி. வி. நவரத்தினம், தலைவர்

க. மயில்வாகனம், பொது முகாமையாளர்.

2602

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்குரிமை பெறுவிடின்

# தமிழ் மொழியைக்கொன்ற கொலை பாதகர்களாவோம்

வி. என்

மீசாலை, வியாழன்

"'ஆஸ்பத்திரிகள், வீதிகள் பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் மக்கட்கு வேண்டியவையே ஆனால் இவற்றையெல்லாம் விட முக்கியமானது தாய்மொழியேயாகும்''

இவ்வாறு புதிதாகநிறுவப்பட்ட விடத்தற்பளை உபதபால் நிலயத்தைத்திறந்து வைத்துப் பேசிய சாவகச்சேரித் தொகுதி ஆசிமன்ற உறுப்பினர் திரு. வ நவரத்தினம் கூறினர்.

கச்சாய் கிராமச்சபைத் தலைவர் திரு எஸ் அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திருவாளர் நவரத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில் "அற்ப சலுகைகளை முன்வைத்து மொழியுரிமைக் கோரிக்கையைப் பின் வைத்தோமேயானல் எமது எதிர்காலச் சந்ததியினரின் அழிவுப் பாதைக்கு வழிவகுத்தவர்களாவோம். தமிழ் மக்களிற்குத் துரோகம் இழைத்தவர்களாவோம். தமிழ் மொழியைக் கொன்ற கொலைபாதகர்களாவோம்.' என மேலும் கூறினர்

மற்றும் வடபகுதிக்தபால் உப அத்தியட்சகர் திரு ஏரம்பமூர்த்தி. ஆசிரியர் திரு. கே. ஐயாத்துரை உட்படப்பலர் இவ்வைபவத்தில் உரையாற்றினர்கள்.

## 'கைத்தறி நிலயங்களைப் பதியுங்கள்'

கோட்டை, வியா

கைத்தறி உரிமையாளர் தமது கைத்தறி நிலயங்களை இம்மாதம் 31-ந் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளவேண்டும் என இலங்கை சிறு கைத்தொழில் திணைக்கள டைரக்டரான திரு. சோமபாலகுணதீர தெரிவித்துள்ளார்

பதிவு செய்யப்படாமலே அநேக கைத்தறி நிலயங்கள் இயங்கி வருவதால் நாட்டிலுள்ள கைத்தறி நிலயங்களின் மொத்தத் தொகை தெரியாதிருப்பதாயும் இதனல் கைத்தறிப் பொருட்களின் உற்பத்தி, விநியோகம், விற்பனை ஆகியவற்றைச் செவ்வனே நடாத்த முடியாதிருப்பதாயும், கைத்தறி நிலயங்களின் கணக்கெடுப்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளை இம்மாதம் 31-ந் திகதிக்கு முன்னர் கைத்தறி நிலயச் சொந்தக்காரர் தமது நிலயங்கள் பற்றிய தகவல்களை அனுப்பிப் பதிவு செய்யுமாறும் தவறுவோருக்கு மேற்கொண்டு தமது நிலயங்களைப் பதிவு செய்யச் சந்தர்ப்பம் அளிக்கப்படமாட்டாது என்றும் திரு சோமபாலகுணதீர தெரிவித்துள்ளார்

## பேடன்பவல் விழா

திருகோணமலை, வியாழன்

திருக்கோணமலை ஸ்ரீ கோணேஸ்வர வித்தியாலயத்தில் குருளையர் 'பேடன் பவல்' விழா நடைபெற்றது மேற்படி வித்தியாலய முதல்வர் திரு இ.வடிவேலுவும் உதவி அதிபர் திருமதி பொ குணரெட்ணமும்தேசியக் கொடி, வித்தியாலயக் கொடி என்பவற்றை ஏற்றி விழாவைத் தொடக்கிவைத்தனர் மேற்படிவித்தியாலய குருளையர் இயக்க இயக்குவர். திரு. எஸ். அருள்தாசின் தேசிய கீதத்துடன் விழா ஆரம்பமானது. இளைஞர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன நிகழ்ச்சிகளில் திறமை பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. (ந. நி)

## வடமராட்சியில் அபிவிருத்திசபை

புலோலி, வியாழன்

வடமராட்சியில் அபிவிருத்திச்சபை அமைக்கப்பட்டது வடமராட்சி தெற்கு மேற்கு காரியாதிகாரி கிராம சபை மண்டபத்தில் நடைபெற்ற விசேஷ கூட்டத்தின் போது அபிவிருத்தி சபை அமைக்கப்பட்டது

விவசாயம், கைத்தொழில் போன்றவைகளை அபிவிருத்தி செய்து வேலை இல்லாதிருக்கும் படித்த வாலிபர்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்குவது சபையின் முக்கிய நோக்கமெனத் தீர்மானிக்கப்பட்டது பல்வேறு துறைகளையும் கவனிக்கக் குழுக்கள் அமைக்கப்பட்டன

விவசாயப் பகுதிக்கு திரு வி கதிராமு, கே. வேலுப்பிள்ளை, சி சிவச்செல்வம் ரி ஜெயவீர சிங்கம் ஆகியோரும் கைத்தொழில் பகுதிக்கு திரு எஸ் குமாரசாமி வி. வேலுப்பிள்ளை எஸ் யோகரட்ணம் ஆகியோரும் பொதுத் தேவைகளை கவனிப்பதற்காக திரு. எம் தங்கத்துரை கே. சங்கரப்பிள்ளை எஸ். சரவணபவான் எஸ் வைத்திலிங்கம் ஆகியோரும் பனம் பொருள் உற்பத்திப்பகுதிக்கு திரு. கே.வேலுப்பிள்ளை வி. வேலுப்பிள்ளை எஸ்.யோகரத்தினம் என். கனகநாயகம் என். நவரத்தினராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## இன்று முடிவு செய்வர்

அனுராதபுரம், வியாழன்

ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபனத்தொழிலாளர் சங்கத்திற்கு வேறொரு இடம் கொடுக்காமல் தமது காரியாலயத்தை அனுராதபுரம் பாதுகாப்புச்சபை பலாத்காரமாக உடைத்துவிட்டதாகவும் அதைத்தொடர்ந்து அனுராதபுரத்தைச் சேர்ந்த சுகாதாரப்பகுதித் தொழிலாளர் அனைவரும் இம் மாதம் 12-ம் திகதி தொடக்கம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுவருவதாகவும், இம்மாதம் 19-ம் திகதிக்கிடையில் முடிவுபெருவிட்டால் அகில இலங்கையிலுமுள்ள சங்கக்கிளைகளின் அனைத்தும் 20-ம் திகதி ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்றும்சங்கப் பொதுக்காரியதரிசி திரு ஆர். செல்லையா நாட்டின் பல்வேறிடங்களிலுமுள்ள சங்கத்தின் 96 கிளைகளிலுமுள்ள சகல உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளார்.

## சேலம் பிறிஜில் கைத்தொழிற்சாலை

நாவலப்பிட்டி, வியாழன்

சேலம்பிறிட்ஜ் கிராமமுன்னேற்றச்சங்கத்தின் முயற்சியால் கைத்தொழிற்சாலையொன்றுநிறுவப்பட்டுள்ளது சங்கத்தலைவர் திரு குமாரசாமியும் செயலாளர் திரு. மா. கி காளிதாசனும் இத்தொழிற்சாலை அமைப்பதில் பெரிதும் முயற்சித்தனர்.

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 5-ம் திகதி (19-3-71)

மேஷம்- எதிரிகள் விழிப்புடன் காத்திருப்பர். ஏக்கத்தின் சாயல் உண்டு ஆத்திரத்தை அடக்கினல் அமைதிக்கு இடமுண்டு.

ரிஷபம்- குடும்பத்தில் பிணி மனதிலே சுமை. அலைமோதும் வாழ்க்கை தெய்வமே துணை

மிதுனம்- கடமையில் தடை ஏற்படும். காலதாமதத்தால் பொருட் செலவு உண்டாகும்.

கடகம்- மேம்பட வாழ்வீர் பிதாவழித் தனமும் கிடைக்கும் நீண்டநாள் ஆசை இன்று பலித்திடும்.

சிம்மம்- செய்தொழில சிறப்படையும். சிரான நிலையும் காணும். உயர் பீட ஆதரவும் உரிமையும் கிடைக்கும்.

கன்னி- மக்கள் புகழ் பரவும். மனதில் மகிழ்ச்சி தோன்றும். வரவில் திருப்தியுடன் வாழ்வில் சுகமுமுண்டு.

துலாம்- பொருள்முடை தென்படும். கடன்பட நேரிடும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது போகலாம்.

விருட்சிகம்- குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கி மறையும். மனதில் அமைதி குன்றும

தனுசு- பணமுடை தீரும். பந்துக்களின் தொடர்புகள் பெருகும். குடும்பத்தில் பரவசமான சூழ்நிலை தென்படும்.

மகரம்- கருத்துவேற்றுமைகள் கலகத்தில் ... இடமளிக்கும். புதிய இடத்தில் இருந்த பகை தலைதூக்கலாம்.

கும்பம்- அதிக ஆசை கொடுக்கல்வாங்கல் விடயத்தில் அனர்த்தத்தை விளைவிக்கும்.

மீனம்- வேதனையில் ரேகைகள் படரும். சகோதரவழியில் உடல்நலம் பாதிக்கப்படலாம்

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## குளிர்த்தி விழா

தாவடி, வியாழன்

தாவடி ஸ்ரீபத்திரகாளிஅம்பாள் ஆலயக் குளிர்த்தி விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

19-3-71 வெள்ளி

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள் 7-15 துதிப் பாடல் 7-45 இரைகானம், 8-00 இஸ்லாமியநிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதம்.

344மீ அன் 49 மீ

பகல் 12-00தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 இசைப்பயிற்சி 6-30 பஜனை, 7-00 பிறநாட்டுப் பாடல்கள், 7-15 பாட்டு 7-45 செய்திச்சுருள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 விளையாட்டு 9-40 ... 10-00 செய்தித் தொகுப்பு.

# 'நாடகங்கள் நமது பண்பை விளக்கவேண்டும்'

தாவடி. வியா

'தமிழின் தொன்மையை, தமிழனின் பாரம்பரியத்தை, பண்பாட்டின் சிறப்பை, கலையின் தெவிகத்தன்மையை, தெய்வபக்தியை எல்லாம் எடுத்துக்காட்டும் கருவியாகவுள்ளது நாடகமாகும். நாமெல்லாம் இந்த அடிப்படையிலேயே நாடகக் கலையை வளர்க்க வேண்டும்

இவ்வாறு தாவடி ஸ்ரீ கணேசா நாடகமன்றத்தின் செயலாளர், திரு எஸ். கனகநாயகம் விடுத்துள்ள அறிக்கையொன்றின்மூலம் தெரிவித்துள்ளார்.

'சமூகசீர்திருத்த நாடகங்களென்ற போர்வையிலே. நமது பண்பாடு, நாகரீகம் இழிவுபடுத்தப்படுகிறது. கீழ்த்தரமான காட்சிகளையும் ஆபாசமான வசனங்களையும் நாடகங்களில் கையாளுவதை ஒழிக்கவேண்டும் சமயம், இலக்கியம் சரித்திரம் சம்பந்தமான நாடகங்களை மேடையேற்ற வேண்டும்.

## தட்டுப்பாடு நீடிப்பு

பருத்தித்துறை, வியா.

அத்தியாவசிய உணவுப் பொருட்களான சீனி, மா, உள்ளி போன்றவற்றின் தட்டுப்பாடு தொடர்ந்து. பருத்தித்துறை, நெல்லியடி, உடுப்பிட்டி, கரவெட்டிப் பகுதிகளில் நீடிக்கிறது உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்கள உத்தியோகத்தர் கோஷ்டிகள் ஆங்காங்கு திடீர் பரிசோதனைகளில் ஈடுபட்டுள்ளனர்.

0 0 0

ஒட்டிசுட்டான், வியாழன்

ஒட்டிசுட்டான் பகுதியில் உள்ள ப. நோ. கூ. சங்கம் தேவையான சீனி, மா வழங்க முடியாமையினல் கடந்த மூன்று வாரங்களாக மக்கள்சிரமப்பட்டுள்ளனர். சங்க முகாமையாளர்களிடம் இதுபற்றி வினவிய போது அவர்கள் நெடுங்கேணி பிரதமசங்கத்தின் நிதிநிலைமை போதாமை காரணமாகவேண்டிய அளவு கொள்வனவுசெய்ய முடியாமையினல் உபசங்கங்களுக்கு விநியோகம்செய்யமுடியாது இருக்கின்றதென்று தெரிய வந்தது.

## மாரடைப்பால் மரணம்

வல்வெட்டித்துறை, வியாழன்

தொண்டமானறு செல்வச் சந்நிதி கோவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி சாம்பசிவம் ஐயர் என்பவர் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை – கிரிமலை பஸ்ஸில் பிரயாணம் செய்தபொழுது மயக்கமுற்று விழுந்தார் அவர் வல்வை இந்திராணி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானர்.

இவர் இருதயக் கோளாறு காரணமாக இறந்தார் என டாக்டர் சுரேந்திரகுமார் தெரிவித்தார். அடுத்து பொலிஸ் உத்தியோகஸ்தர் திரு. க தங்கராசா சாட்சியமளித்தபின் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு வி. பி. சுந்தரலிங்கம் இயற்கை மரணம்எனத் தீர்ப்பளித்தார்.

## அ. அமைப்பு குழுவுக்கு மகஜர்

தாவடி, வியாழன்

"இலங்கையில் எந்தப் பாகத்திலும் வாழும் சிங்கள மக்களும், தமிழ் மக்களும், தங்களுடைய சொந்த மொழியில் அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு செயலாற்றுவதற்கான உரிமை இருக்கவேண்டும்"

இவ்வாறு. அரசியல் அமைப்புக் குழுவுக்கு அனுப்பிய மகஜரொன்றில், மானிப்பாய் பட்டின சபையின் 6-ம் வட்டார அங்கத்தவர் திரு. சி முத்துக்குமாரசாமி வேண்டியுள்ளார்

"நீதி நிர்வாக மொழி சிங்களமும், தமிழுமாவதுடன் பதிவேடுகளும் இவ் இரு மொழிகளிலும் இருத்தல் வேண்டும். எனவும் அம்மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

## 'சிந்தித்தல் நமது கடன்'

தாவடி, வியாழன்

"நெல்லை நாம் விதைக்கின்றோம், நீர் பாய்ச்சி வளர்க்க நம்மால் முடியும். ஆனல் நெற்கதிர் மணிகளை எம்மால் ஆக்கமுடியுமா? இல்லை. இது ஏன் என்று நாம் நன்கு சிந்திக்கவேண்டும். சிந்தனையின் முடிவு தெய்வீகத் தன்மையை நன்கு உணர்த்தும்"

இவ்வாறு ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள், கிளிநொச்சி மாரியம்மன் ஆலய விழாவில் உரை நிகழ்த்துகையில் கூறினர். ஸ்ரீ. மா. சங்கரலிங்கம் சுவாமிகள் விழாவில் பக்திப் பாடல்கள் பாடினர்.

## மாணவர் நூலகம்

மூதூர், வியாழன்

மூதூர் கூனித்தீவு வித்தியாலய மாணவ மன்றத்தினல் "மாணவர் நூலகம்" ஆரம்பிக்கப்பட்டது இந் நூலகத் திறப்புவிழாவிற்கு வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு செ ஐயாத்துரை தலைமைவகித்தார். கூனித்தீவுக் கிராம முன்னேற்றச்சங்கத் தலைவர் திரு. கா. பொன்னுத்துரை மங்கள விளக்கேற்றி நூல் நிலயத்தைத் திறந்து வைத்தார்.

இறைவணக்கம் செல்வி சி தனலட்சுமியினல் பாடப்பட்டது. நூல்நிலயத்தின் அவசியம் பற்றித் திரு. கா. பொன்னுத்துரையும், நூலும் அறிவும் என்னும் விடயம்பற்றி ஆசிரியர் திரு கா. சிவரத்தினமும் நூலகத்தைப் பயன்படுத்தல் என்ற விடயம்பற்றி ஆசிரியர் திரு. க. துரைரட்ணசிங்கமும் பேசினர்கள். மாணவர் மன்றத் தலைவர் செல்வன் சு.விஜயநேசனல் நன்றிதெரிவிக்கபபட்டது.

## புதிய தலைவர்

அநுராதபுரம், வியா:

அனுராதபுரம் உதைபந்தாட்டச் சங்ககூட்டத்தில் இலங்கையின் மரதன் ஓட்ட வீரரான ஏ எஸ். குணரெத்தினம் செயலாளராகதெரிவு செய்யப்பட்டார். இப்பதவியை வகிக்கும் இவர் அனுராதபுரம் உதைபந்தாட்டச்சங்கத்தின் உதவிச் செயலாளராக ஒருவருடம் கடமையாற்றியுள்ளார்.

கூட்டம் திரு. ராஜா சமரசிங்கா தலைமையில் நடைபெற்றது

வடமாகாணத்தின் விளையாட்டு வீரர் வடமத்திய மாகாணத்தின் விளையாட்டுத்துறையின் உபர் பீடத்தில் பதவிவகிப்பது இதுவே முதற்தடவை என்பதுகுறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஈழநாடு' கிரிக்கெட் புதிர்போட்டி

# வெற்றி பெறுவோருக்கு சிறந்த பரிசுகள்!

— நமது விளையாட்டு நிருபர் "தேவா" —

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்றல்-சென் ஜோன்ஸ் கல்லூரிகளின் 73-வது வருடாந்த கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'ஈழநாடு' நடாத்தும் 'கிரிக்கெட் புதிர்' போட்டிக்கு யாழ் மாவட்டத்தில் உள்ள பல வர்த்தகஸ்தாபனங்கள் பரிசுகளை அளிக்க முன்வந்துள்ளன.

சென்ற வருடம் 'ஈழநாடு' நடாத்திய இப் புதிர்ப்போட்டிகளில், மிகக் கூடுதலான விளையாட்டு ரசிகர்கள் கலந்து கொண்டார்கள். இவர்களில் பலர் தமது விடைகளை சரியாக எழுதியிருந்த போதிலும், எமது பத்திரிகையில் வெளியான கூப்பன்களை நிரப்பி தமது விடைத்தாள்களுடன் இணைக்காமலும், தமது விடைகளைத் தெளிவான முறையில் பிறிதொரு தாளில் எழுதாமலும் விட்டதினால் பரிசைப் பெறும் வாய்ப்பை இழந்திருந்தனர். இப்படியான தவறுகளை இம்முறையும் விடாமல் உங்கள் விடைகளுடன் எமது பத்திரிகையில் வெளியாகும் 'புதிர் கூப்பனை' நிரப்பியும், விடைகளை தெளிவாகவும் எழுதி அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக் கொள்கின்றோம்.

### பரிசு வழங்குவோர் விபரம்

'ஸ்ரீல்' புகைப்படப் பிடிப்பாளர் திரு. கனகலிங்கம் (சிட்டு)

யாழ். மெட்டல் இன்டஸ்றீஸ் ஸ்தாபனம்.

'லிங்கம் ரெகிஷஸ்' பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

'பிறின்ஸ்' ஸ்ருடியோ பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

யாழ் மத்திய கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெறவிருக்கும் 73 வது கிரிக்கெட் போட்டியையொட்டி 'ஈழநாடு' நடாத்தும் 'கிரிக்கெட் புதிர் போட்டி'

### போட்டி நிபந்தனைகள்

0 ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.

0 எல்லாம் சரியான விடைகளுடன் கூப்பன் கிடைக்காத பட்சத்தில் ஆகக்கூடிய சரியான விடையுடன் வரும் கூப்பனுக்கு முதல் பரிசு வழங்கப்படும். கூடுதலான சரியான விடைகளை அனுப்பும் மற்றும் நால்வருக்கும் பரிசுகள் வழங்கப்படும்

0 கூப்பன்களை 'ஈழநாடு' கிரிக்கெட் புதிர், 'ஈழநாடு' த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

0 புதிர் போட்டிக்கான மத்தியஸ்தர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

0 கூப்பன்களுடன் வராத விடைகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

0 புதிருக்கான விடைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 22-3-71 நண்பகல் 12 மணிக்கு முன்.

0 உங்கள் விடைகளை அழகாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்.

### புதிருக்கான கேள்விகள்

(1) கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கான கோஷ்டியைத் தெரிவு செய்வதற்கு 'பூவா-தலையா' போட்டுப் பார்க்கும் போது யாருக்கு வெற்றி கிடைக்கும்?

(2) கிரிக்கெட் போட்டியில் யாருக்கு இறுதி வெற்றி கிடைக்கும்?

(3) கூடுதலான விக்கெட்டுகளை 'பேஸ்மன்'களா 'ஸ்பின்னர்'களா எடுப்பார்கள்?

4) முதல் இன்னிங்ஸில் கூடுதலான ரன்களை எந்தக் கோஷ்டி எடுக்கும்?

(5) இரண்டு இன்னிங்ஸிலும் இரு கோஷ்டிகளிலும் யார் கூடுதலான விக்கெட்டுகளை வீழ்த்துவார்கள்?

(6) முதல் இன்னிங்ஸில் சென். ஜோன்ஸ் காப்டனா சென்றல் காப்டனா கூடுதலான ரன்களை எடுப்பர்?

(7) இப்போட்டியில் 'ஓல் றவுண்டர்'ருக்கான பரிசை யார் பெறுவார்கள்?

(8) இப்போட்டிக்கு யார் யார் மத்தியஸ்தம் (அம்பயஸ்) வகிப்பார்கள்?

### காந்தரூபன் வெற்றி

தாவடி, வியாழன்

கோண்டாவில் வேதபாராயண சனசமூகநிலைய விளையாட்டுக் கழகத்தினருக்கும் சந்தரோடை காந்தரூபன் விளையாட்டுக் கழகத்தினருக்கும் இடையே நடைபெற்ற சினேகபூர்வமான, சரபந்தாட்டப் போட்டியில் கோண்டாவில் கழகத்தை, சந்தரோடை கழகம் 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற இப்போட்டிக்கு, திரு. அ. கமலநாதன் மத்தித்ஸ்தம் வகித்தார்.

### தாச்சிப் போட்டி

எழுதுமட்டுவாள், வியா.

உடுவில் மல்வத்தை விளையாட்டுக்கழகத்தின் முகலாம் பிரிவுக்கும் சண்டிலிப்பாய் ஹொலிவூட்கழகத்திற்கும் இடையே நடைபெற்ற தாச்சிப்போட்டியில் 2—6 பழங்களினால் சண்டிலிப்பாய் ஹொலிவூட்கழகம் வெற்றியீட்டியது இதற்கு விளையாட்டு உத்தியோகத்தர் திரு எஸ். தர்மரத்தினம் தலைமை வகித்தார். மத்தியட்சராக திரு ஆர். யோகரத்தினம் கடமை புரிந்தார்

அடுத்தபோட்டி இம்மாதம் 21ந் திகதி பிற்பகல் சண்டிலிப்பாய் ஹொலிவூட் கழகத்திற்கும், சங்குவேலி ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்குமிடையே நடைபெறவுள்ளது.

### பரிசளிப்பு பெட்டிகள்

எழுதுமட்டுவாழ், வியா.

பனைஓலைகளிலும் வேறு உள்நாட்டுப் பொருட்களிலும் பரிசளிப்புப் பெட்டிகளை தயாரிக்க இலங்கை இரும்புக் கூட்டுத்தாபனம் ஆலோசித்து வருகிறது இக் கூட்டுத்தாபனம் யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களிடம் பனை ஓலையில் செய்யப்பட்ட மாதிரி பரிசளிப்புப்பெட்டிகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

### ஆலய உற்சவம்

வல்வெட்டித்துறை, வியா.

வல்வை சிவன்கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 26-ந் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது 15.16-ம் திகதிகளில் தேர் தீர்த்த திருவிழா நடைபெறவிருக்கிறது.

### விவசாயபோட்டி முடிவுகள்

அம்பன் வியாழன்

விவசாயப் போதனாசிரியர் பகுதிரீதியில் நடைபெற்ற போட்டியில் முதலாவது இடத்தை பெற்றகீழ்க்காணும் இளம் விவசாயிகள் கழக அங்கத்தவர்களுக்கு இம் மாதம் 22-ந் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை வானொலி விவசாய அறிவுப் போட்டியில் பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றது விபரம் வருமாறு: திவுப்பகுதி ஏ மாணிக்கராசா பண்டத்தரிப்பு: செல்வி என் சகுந்தலாதேவி ஆதிமயிலிட்டி செல்வி என் சிவநேசம் கள்ளியங்காடு: என் மனோகரன் அம்பன்: ந இலட்சுமியம்மா மிருசுவில்: கே ராஜேஸ்வரி ராமநாதபுரம்: செல்வி கே மல்லையற்சரி மல்லாவி எஸ் ... நெல்லியடி: கே ஜெயராணி

### ஆசிரியர்க்கு சேவை நீடிப்பு வழங்குமாறு கோரிக்கை

அரியாலை, வியாழன்

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் வலி. கிழக்கு தமிழாசிரியர் சங்கம் தனது நிர்வாகசபை கூட்டத்தை திரு. க. குமாரசாமி தலைமையில்கூட்டிய பொழுது வித்தியாபகுதியையும் அரசாங்கத்தையும் கோரும் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு:

■ அரசாங்கத்தில் இருந்து ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் மூன்று மாதச் சம்பளம் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்,

■ இளைப்பாற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய பென்ஷன் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுத்தல்.

■ ஆசிரியர்களுக்கும் சேவை நீடிப்பு வழங்கி ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் நன்மையடைய வழி செய்ய வேண்டும்

மேற்படி கூட்டத்தில் அத்தியார் இந்துக் கல்லூரி ஆசிரியர் அமரர் திரு எஸ் கே. கந்தையாவுக்கும், திரு இ. துரைசிங்கம் ஆகியவர்களின் ஆன்மசாந்தியின் பொருட்டும் மௌன அஞ்சலி அனுட்டிக்கப்பட்டது.

### நஞ்சருந்தி தற்கொலை

மாவிட்டபுரம், வியா.

குடும்பத்தகராறால் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று ஈவினையில் நடந்துள்ளது

ஈவினையைச் சேர்ந்த செல்லப்பா இராசரத்தினம் என்பவர் வீட்டில் ஏற்பட்ட தகராறு காரணமாக பொலிடோல் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

இது குறித்து மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. இராசநாயகம் தற்கொலை என தீர்ப்பளித்தார்.

### புதிய உத்தியோகத்தர்

பருத்தித்துறை, வியா.

பலாலி பொலி ரெக்னிக்கல் நிறுவன மாணவர் மன்ற புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

காப்பாளர்; அதிபர் திரு. கே. சிவபாலன் தலைவர்: திரு சி ஏ. தேவச்சந்திரன் உபதலைவர்: திரு. ஏ. எச். எம். அன்சாரி செயலாளர்: செல்வி. எஸ் வன்னித்தம்பி தனாதிகாரி: திரு. எஸ் ஜெயபாலன் தமிழ்ப்பத்திராதிபர் செல்வி. பி. செகராசசிங்கம் ஆங்கிலப் பத்திராதிபர் செல்வி. எஸ் பரராசசிங்கம்.

நிர்வாக உறுப்பினர் செல்வி எம். பசுபதி திருவாளர்கள் எம். சண்முகரத்தினம் எஸ். பேரின்பநாயகம்

### சகாயநிதிச்சங்க வருடாந்த கூட்டம்

மாவிட்டபுரம், வியா.

அகில இலங்கை கிறிஸ்தவ ஆசிரியர் சகாய நிதிச்சங்க வருடாந்தக் கூட்டம் இம் மாதம் 24-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

இக் கூட்டம் 24-ம் திகதி காலை திரு இ ஆறுமுகம் தலைமையில் அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரியில் நிகழவிருக்கிறது.

இக்கூட்டத்தில் வருடாந்த அறிக்கையை சங்கச் செயலாளர் திரு சுப்பிரமணியம்சமர்ப்பிப்பார்.

### ஒளிமயமாகும்

மீசாலை, வியாழன்

மீசாலை இன்னும் இரண்டு மாதங்களில் மின்சாரவசதி பெற்றுஒளிமயமாகப் போகிறது.

சாவகச்சேரித் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந நவரத்தினமும் மீசாலை மின்சார அபிவிருத்திக் கழகத்தினரும் மேற்கொண்ட பெரு முயற்சியின் காரணமாக மீசாலைக்கு மின்சாரம்வழங்குவதற்கான வேலைகளை மின்சாரசபை மேற்கொண்டுள்ளது:

மின்கம்பங்கள் நிறுத்தும் வேலையில் அரைப்பங்கு முடிந்துவிட்டதாகவும் அடுத்தமாதம் வேலைகள் யாவும் முடிவடைந்து விடுமெனவும் மின்சார சபையின் சாவகச்சேரிப் பகுதி மின் முகாரி திரு. கே. ஆலாலசுந்தரம் தெரிவித்தார்.

### சீனி இறக்குமதி

கோட்டை, வியாழன்

அடுத்த வாரம் 16.000 தொன் சீனி கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துசேரவிருக்கிறது.

18ந் திகதி வந்து சேரவிருக்கும் இரு சீனிக்கப்பல்களில் 2800 தொன்னும், 2600 தொன்னும் இறக்குமதிசெய்யப்படவிருக்கிறது. மார்ச் 20ந் திகதி வந்துசேரவிருக்கும் கப்பலில் 10,500 தொன் சீனி இறக்குமதி செய்யபப்டும்.

### காய்கறி பழவகை ஆராய்சி நிலயம்

கோட்டை, வியா

பண்டாரவளைத் தொகுதியில் காய்கறிபழவகைகளைப் பதனிடுவதற்கான ஆராய்ச்சி நிலைய மொன்றை அரசாங்கம் விரைவில்நிறுவ விருக்கிறது. இந்த ஆராய்ச்சி நிலயத்துக்குஅரசாங்கம் 100 ஏக்கர் காணியை ஒதுக்கியுள்ளது.

காய்கறிகளையும் பழவகைகளையும் அதிகம் பயிர்செய்வதுபற்றியும் அவற்றைப் பதனிடுவதுகுறித்தும் இவ்வாராய்சி நிலையத்தில் ஆராய்ச்சி செய்யப்பட விருக்கிறது. பண்டாரவளைத் தொகுதி ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு ஆர் எஸ் அப்புகாமி இந்நிலையத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

### வாகனங்களின் புள்ளிவிபரம்

கோட்டை, வியா.

நாட்டில் தற்போது பாவனையில் இருக்கும் சகலவித போக்குவரத்து வாகனங்களினதும் புள்ளிவிவரங்களைச் சேகரிக்க நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சர் திரு மைத்திரி பாலசேனநாயக்கா நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

மேற்படி போக்குவரத்து வாகனங்களது வரவுசெலவு குறித்து ஆராய்ந்து பொருளாதாரக் கணிப்பு எடுக்கவே அமைச்சு இவ்வித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

### குற்றவாளிகளின் குடும்பங்களுக்கு பராமரிப்பு

கோட்டை, வியாழன்

குற்றச்செயல்களினால்தண்டனைக்குள்ளாகும்நபர்களின் குடும்பங்களை அரசாங்கம் பராமரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவிருக்கின்றன.

இந்த ஏற்பாட்டின்படி சம்பந்தப்பட்ட நபர்களின் வீடுகளுக்கு அதிகாரிகள் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டறிவார்களாம்.

"ஈழநாடு"
நடாத்தும்
கிரிக்கெட்
'புதிர் போட்டி'
கூப்பன்

பெயர்...................................

விலாசம்...................................

...................................

கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழர் ஒற்றுமை பட்டால்தான் இனிமேல் விமோசனம் உண்டு'

## ஜி. ஜி. அமெரிக்கா பயணம்

யாழ்ப்பாணம், வெள்ளி தமிழ்மக்கள் ஒற்றுமைப் பட்டால்தான் விமோசனம் உண்டு என்று தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் தமிழ்க் காங்கிரஸ் நிர்வாகக் காரிய தரிசி திரு த சங்கரப்பிள்ளைக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

திரு. பொன்னம்பலம் அமெரிக்கா செல்லும் வழியில் ஹொனலூலு என்ற இடத்திலிருந்து இக்கடிதத்தை எழுதியிருக்கின்றார்.

மலேசியாவில் தங்கியிருந்த திரு. பொன்னம்பலம் கடந்த வாரம் அமெரிக்கா புறப்பட்டார்

அமெரிக்காவில் சுமார் இரண்டு மாதங்கள் அவர் தங்கியிருப்பார் எனத்தெரிய வருகிறது.

திரு. பொன்னம்பல எழுதியுள்ள அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக அறிகிறேன். இம் முயற்சி வெற்றிபெற்றால் தான் தமிழ் மக்களுக்கு விடிவுண்டு இந்த ஒற்றுமை முயற்சியை முறியடிக்க சில சக்திகள் முன்வரக்கூடுமென்பதையும் கவனத்தில் வைத்துப் பணியாற்றவேண்டும்.

## மேயரின் பதில்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி 'திரு. இராசசூரியர் மாட்சிமை தங்கிய மகாராணியின் சபைக்கு மேல்முறையீடு செய்துள்ளார் என்றும் திரு இராஜசூரியரை அங்கத்தவராக கணிக்கும் படியும் உள்ளூராட்சி சேவை கமிஷனிடமிருந்து வந்தகடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது'

யாழ்ப்பாணம் மாநகர சபை கூட்டத்தில் ஜனாப் எம் ஜி பஸிர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது மேயர் ஏ எஸ் துரைராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்

மேயர் மேலும் தெரிவித்ததாவது. நான் அறிந்த மட்டில் மாட்சிமை தங்கிய மகாராணியின் சபைக்கு எதுவித மேல் முறையீடும் இதுவரை செய்யப்படவில்லை.

உள்ளூராட்சி சேவை கமிஷனரிடமிருந்து வந்த கடிதம் ஆணையாளரிடம் உள்ளது எந்த உறுப்பினரும் அதனைப்பார்வையிட உரிமையுடையவர்

முதலாம் வட்டாரமாநகர சபை உறுப்பினரான திரு ஏ ஜி ராஜசூரியரின் அங்கத்துவம் பற்றி உள்ளூராட்சி சேவை கமிஷனிடமிருந்து ஏதாவது கடிதம் வந்ததுண்டா என எம் ஜி பஸிர் கேட்ட கேள்விக்கு மேயர் "ஆம் எனப்பதிலளித்தார்,

...—

பல்கலைக்கழகத்தில்

## மாணவர் மத்தியிலும் பீதி

பேராதனை, வியா வெடிகுண்டுகளினால் அபாயம் ஏற்படலாம் என்ற பயத்தினால் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கடந்த சில தினங்களாக தம் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

வெடிகுண்டு அபாயம் இருக்குமென்ற பீதிதரும் கதைகளைக் கேட்டு மாணவர்கள் வீட்டுக்குச் செல்வதால் சர்வகலாசாலை மாணவர்களின் விடுதிகள் வெறுமையாகக் காட்சியளிப்பதாக பல்கலைக்கழக உயர் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளனர்.

பெருந்தொகையாகவெளியேறிய மாணவர்களில் அதிகமானோர் பெண்களாவர். பயத்தற்கு உள்ளான பெற்றோரும் உறவினர்களும் இவர்களை வந்து அழைத்துச் செல்லுகிறார்கள் எனக் கூறப்படுகிறது.

இவ்வாறு மாணவர்கள் வெளியேறுவதால் மாணவர்களின் தொகை சர்வகலாசாலையில் குறைந்தவண்ணம் இருக்கிறதாம். சர்வகலாசாலையில் நடந்த தேர்தலின் போது தமக்கு எதிராக வாக்களித்த மாணவர்களை சேகுவேரா இயக்கத்தினர் தாக்கக்கூடும் எனும் பீதி அங்கு நிலவுவதாக மாணவிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

# சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி நேற்று அதிர்ஷ்டம்பார்க்கப்பட்ட 340வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
25 D 0835 ரூ 80,570

இரண்டாவது பரிசு
01 W 0174 ரூ 32,228

மூன்றாவது பரிசு
28 D 0248 ரூ 8,057

தலா ரூபா402 85 சதம் பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| | | 22 K 0730 | 05 K 0758 |
| | | 22 K 0836 | 17 K 0057 |
| | | 33 K 0147 | 22 K 0672 |
| | | 32 L 0604 | 01 L 0308 |
| | | 05 L 0914 | 05 L 0401 |
| | | 19 L 0890 | 16 M 0518 |
| | | 09 M 0192 | 26 N 0003 |
| | | 02 N 0370 | 19 N 0263 |
| | | 15 N 0900 | 20 N 0886 |
| | | 14 N 0858 | 11 N 0731 |
| | | 22 O 0916 | 11 P 0456 |
| | | 01 Q 0226 | 30 Q 0319 |
| | | 31 Q 0684 | 21 R 0889 |
| 25 A 0052 | 15 A 0053 | 04 R 0932 | 02 R 0531 |
| 09 A 0517 | 21 A 0570 | 23 R 0132 | 31 R 0058 |
| 01 B 0339 | 24 B 0217 | 20 S 0059 | 18 S 0064 |
| 18 B 0521 | 21 B 0209 | 03 T 0374 | 10 T 0485 |
| 18 B 0740 | 19 C 0926 | 12 T 0419 | 34 T 0344 |
| 11 C 0676 | 33 C 0457 | 12 T 0222 | 19 T 0036 |
| 16 C 0617 | 02 C 0734 | 11 T 0279 | 18 T 0032 |
| 30 C 0676 | 34 C 0345 | 15 T 0349 | 13 U 0631 |
| 07 C 0078 | | 34 U 0006 | 15 U 0534 |
| 34 C 0510 | 10 D 0197 | 20 U 0030 | 15 V 0070 |
| 22 D 0937 | 25 D 0788 | 27 V 0702 | 32 W 0387 |
| 02 E 0822 | 01 F 0636 | 25 W 0940 | 03 W 0955 |
| 03 F 0172 | 11 F 0549 | 01 X 0595 | 24 X 0128 |
| 22 G 0086 | 26 G 0918 | 29 X 0992 | 19 Y 0772 |
| 17 G 0517 | 23 H 0566 | 06 Y 0815 | |
| 23 H 0389 | 25 H 0546 | 04 Y 0513 | 20 Y 0629 |
| 29 H 0812 | 02 H 0421 | 07 Z 0956 | 14 Z 0490 |
| 25 H 0942 | 02 H 0129 | 22 Z 0232 | 17 Z 0968 |
| 06 J 0053 | 05 J 0778 | | |
| 09 J 0909 | 24 J 0477 | | |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை)

## மாவை ஆலய வழக்கு

## "2-ம் எதிரியைப்பிடித்ததும் சால்வைதான் அகப்பட்டது"

மாவிட்டபுரம் வியா. "மாவை ஆலய வீதியால் ஓடிவந்த 1ம் எதிரியைநான் பிடித்து கட்டிவைக்க நினைத்த போது 2ம் எதிரி என் பிடரியில் அடித்ததால் 1ம் எதிரியை கைவிட்டு 2ம் எதிரியை பிடித்ததும் அவரது சால்வை கையில் அகப்பட்டது".

இவ்வாறு மாவைக்கந்தன் ஆலய தேர் தீவைப்பு வழக்கில் சாட்சியமளித்த க பொன்னுச்சாமிஐயர் கூறினார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி எஸ் ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

சாட்சியமளித்த பொன்னுச்சாமிஐயர் தொடர்ந்து கூறியதாவது:-

சம்பவதினம்எனது கிணற்றடியில்குளிப்பதற்காக அரையில்சால்வைகட்டிக்கொண்டு நின்றேன். அப்போது தேரைக் கொளுத்திப் போட்டு ஓடுகிறார்கள் என்று சத்தம் கேட்டது. உடன் நான் கிணற்றடியில் இருந்து வீதிக்கு ஓடினேன். அப்போது முதலில் நாகரத்தினம் வந்தார் நான் அவரைப் பிடித்தேன் பின்பு அடித்து இழுபறிப்பட்டேன் பின் அவரைப்பிடித்துகட்ட நினைத்தபோது அவரின் பின்வந்த 2ம் எதிரியான சின்னக்குட்டியின் மகன் எனது பிடரியில் அடித்தார், அப்போது 1ம் எதிரியை கைவிட்டேன். பின் 2ம்எதிரியை பிடித்ததும் அவரது சால்வை எனதுகையில் அகப்பட்டது. இதையடுத்து காங்கேசன்துறை பொலிசில் வாக்குமூலம் அளித்ததுடன் பிரஸ்தாப சால்வையையும் அங்கு ஒப்படைத்தேன்.

நீதிபதி விசாரணையை 22ம் தேதி ஒத்திவைத்தார்.

# 'தம்பருக்கு தமிழர் கடமைப்பட்டவர்கள்'

### நூல் வெளியீட்டுவிழாவில் புகழ் அஞ்சலி

யாழ்ப்பாணம், வெள்ளி 'தம்பர் மாஸ்டர் சிறந்த கல்வி மான், நல்ல மனிதர், மத்தியகல்லூரியின் பேருக்கும் புகழுக்கும் அரும் பாடுபட்டவர். தன் பெயரில் சிறந்த 'விஞ்ஞானி' யின் பதிப்புரிமையை தமிழ் மக்களின் நன்மையைக் கருதிவடமாகாணவிஞ்ஞான ஆசிரியர் சங்கத்திற்கு மாற்றித் தந்தார் எத்தனை காலம் சென்றாலும் இந்த அரும் பெரும் செயலை தமிழ் மக்கள் மறக்கமாட்டார்கள் அவருக்கு. என்றென்றும் தமிழ் மக்கள் கடமைப் பட்டவர்கள்'

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் 'விஞ்ஞானி' வெளியீட்டு விழாவில் பேராசிரியர் திரு. அ. சின்னத்தம்பி பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்

விஞ்ஞான சஞ்சிகையின் முதல் பிரதியை பேராசிரியர் அ சின்னத்தம்பி வழங்க திரு ஏ சபாலிங்கம் பெற்றுக்கொண்டார்

விழாவிற்குத் தலைமை தாங்கிய வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கத் தலைவர் திரு ம பரமானந்தன் பேசும்போது, சமுதாயத்தில் ஆங்கில மோகம் பரவியிருந்த காலத்தில் விஞ்ஞானத்தை பாமரனும் அறியவேண்டும் என்ற நல்லார்வத்தினால் 1953-ம் ஆண்டு 'விஞ்ஞானி' யை ஆரம்பித்து தம்பர் மாஸ்டர் அதன் மதிப்புரைக் குழுவில் பணியாற்றினார் என்றும் அவரின் ஞாபகார்த்த தினமான இன்று எமது சங்கத்தின் சார்பில் மீண்டும் 'விஞ்ஞானி' வெளிவருவதாகவும் கூறினார்

தம்பர் மாஸ்டரின் மறைவு குறித்து கூட்ட ஆரம்பத்தில் 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## யாழ். சிறையில் சேகுவேரா தலைவர்

யாழ்ப்பாணம், வெள்ளி கைது செய்யப்பட்ட சேகுவேரா இயக்கத் தலைவர் திரு. ரோகண விஜயவீராவும் மற்றும் நால்வரும் யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் றிமாண்டிலிருப்பதாகத் தெரிகிறது. இவர்களுக்குப் பலத்த பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

......

## அன்பில் மலர்ந்த அமரகாவியம்

யாழ்ப்பாணம், வெள்ளி வண ரீ சவிரிமுத்து அடிகள் கதைவசனம் எழுதித் தயாரித்துவரும் 'அன்பில் மலர்ந்த அமரகாவியம்' என்னும் நாடகம் அடுத்த மாதம் 4ந் திகதி மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தினரின் இந்நாடகத்தில் 150க்குமேற்பட்டநடிகர்கள் பங்குபற்றுகின்றார்கள் பழைய, புதிய ஏற்பாடுகளை விளக்கும் கருத்தடங்கிய இந்நாடகம் பலகாட்சிகளைக் கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குருபூசை விழாக்கள்

சுழிபுரம், வியாழன் கீரிமலைக் குழந்தைவேல் சுவாமிகள் மடாலயத்தில் கடையிற்சுவாமி, பரமகுரு சுவாமிகுழந்தைவேற்சுவாமி ஆகியோரின் குருபூசைகள் இம் மாதம் 24,25,26 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன. மடாலயத்திற்காக புதிதாக அமைக்கப்பட்ட கண்டாமணி 24 தி திகாலை முதன் முதல் ஒலிக்கப்படும். விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் முதலியார் வை. மகேசன் செய்து வருகின்றார்

—

கோட்டை,வியாழன் குறுகியகால தண்டனை வழங்கப்பட்ட சிறைக்கைதிகளும் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கி உணவில் சுயதேவையைப் பூர்த்தி செய்ய உதவுவார்கள் நீதி அமைச்சின் ஆட்சி மன்ற செயலாளர் திரு ரத்னஸ்ரீ விக்கிரம நாயக்கா சிறைச்சாலை அதிகாரிகளுடன் நடத்திய மகாநாட்டின் போது இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.

## பிரிவிக்கவுன்சிலில் ஆலயப் பிரவேச வழக்கு!

### 'சுந்தரர்' லண்டன் போகிறார்

மாவிட்டபுரம், வியா. மாவிட்டபுரம்கந்தசுவாமி ஆலயப் பிரவேச வழக்கு இம்மாதம் 30ம் தேதி லண்டன் பிரிவிக்கவுன்சிலில் விசாரணை செய்யப்படவிருக்கிறது இவ்வழக்கில், இந்நாட்டிலுள்ள நடைமுறைகளைப்பற்றி எடுத்துக் கூறுவதற்காக அட்வகேட் வி சுந்தரலிங்கம் அடுத்த வாரம் லண்டனுக்கு செல்லவிருக்கின்றார்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குள் வழிபாடு செய்ய மட்டுவிலைச் சேர்ந்த முருகன் சின்னையா என்பவர் 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 1ம் தேதி சென்ற போது அவரை தடுத்ததாக வி. சுந்தரலிங்கம் மீது குற்றம்சாட்டி காங்கேசன்துறை பொலிஸார் சமூக குறைபாடு ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத்தாக்கல் செய்தனர்.

இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் எம் சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவிசாரணைமுடிவில் எதிரிக்கு 50 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இத்தீர்ப்பை எதிர்த்து வி சுந்தரலிங்கம் சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய்திருந்தார் சுப்ரீம்கோர்ட்டு விசாரணையில், கீழ்க்கோர்ட் தீர்ப்பு ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து, இத்தீர்ப்பை எதிர்த்து வி சுந்தரலிங்கம் பிரிவிக்கவுன்சிலுக்கு அப்பீல் செய்திருந்தார். பிரிவிக்கவுன்சில் அப்பீல் விசாரணை இம்மாதம் 30ம் தேதி நடைபெறவிருக்கிறது.

......

## உரும்பராய்க் கடிதம் சுழிபுரத்திலா?

சுழிபுரம், வியாழன் கொழும்பு பெரிய தபாற்கந்தோரில் கடமையாற்றும் திரு இ இந்திரலிங்கம் என்பவர் உரும்பராயிலுள்ள திரு எஸ் திருநாவுக்கரசு என்பவருக்கு அனுப்பிய கடிதம் ஒன்று சுழிபுரம் கிராமசபை அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தது.

கடந்த சில தினங்களாக சுழிபுரம் கிராம சபைக் கந்தோருக்குவிலாசம்மாறிய கடிதங்கள் அதிகம் வந்து சேர்ந்துள்ளதாகவும் தெரிகிறது கடிதங்களில் விலாசங்கள் தெளிவாக எழுதப்பட்டுள்ளவை குறிப்பிடத்தக்கதாகும்,

விளம்பரம் செய்க

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட்" க்காக ... யாழ்ப்பாணம் ... கோவில் வீதி 68 - ம் இலக்கத்திலுள்ள ... அச்சகத்தில் 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ந் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org